Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

C/638 Job! With High Salary Follow



Cima_UK, BIT

(O/L,A/L not necessary)

MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org

SMS your name & course to 772 395 895 & Get Schol.

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 16 வெள்ளிக்கிழமை (29.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 212

## அரச உயர்மட்ட பிரதிநிதிகளுடன் ஈ.பி.டி.பி.யினர் இன்று சந்திப்பு

### நிர்வாகச் செயலாளர் இராஜமாணிக்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் இன்று அரச உயர் மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவர் என்று ஈ.பி.டி.பியின் நிர்வாகச் செயலாளர் அ.இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யினராகிய எமக்கும், அரச தரப்பு உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விஷேட சந்திப்பும், பேச்சுவார்த்தையும் இன்றைய தினம் நடைபெறும். இச் சந்திப்பின் போது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் குறித்தும் நடைமுறையில் மக்கள் அனுபவித்து வரும் பிரச்சினைகள் குறித்தும் அரச தரப்புடன் பேசப்படும் என்றும்,

கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களின் பிரதிநிதியாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர் என்ற வகையில் அடிக்கடி எமது மக்களின்

(11ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் நோக்கம் இல்லை

### வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்களையும் கிளர்ச்சிகளையும் நடத்தும் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள ராஜதந்திரிகளைச் சந்தித்தபோது இவ்வாறு கூறியதாக வெளிவிவகார அமைச்சு விடுத்த ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலரால்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்ல

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல



(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தம்மை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வது தவறானது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த**

(11ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலை அதிகரிப்புக்கு அனுமதி இல்லையெனில் தட்டுப்பாடு ஏற்படும்

(கொழும்பு)

பால்மா வகைகளின் விலையை 46 ரூபாவால் அதிகரிப்பதற்கு அனுமதியளிக்காது விட்டால், இன்னும் சில வாரங்களில் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென பால்மா நிறுவனங்கள் நேற்று எச்சரித்துள்ளன.

400 கிராம் பால்மா பக்கற் ஒன்று குறைந்தபட்சம் 244 ரூபாவுக்கு தற்போது விற்பனை செய்யப்படுகிறது. புதிய விலையின்படி 400 கிராம் பால்மா பக்கற் ஒன்று 290 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என பால்மா உற்பத்தி நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெரிவித்துள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

## டைனமெற் வைத்து மீன் பிடித்தவர் கைது

(மன்னார்)

மன்னார் - பள்ளிமுனைக் கடலில் டைனமெற் வைத்து மீன் பிடித்த 12 பேர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மன்னர் நீதிவான் கே. ஜீவராணி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளதுடன், இவர்கள் பிடித்த 100 கிலோ மீன்களை அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## மிருசுவில் படுகொலைக் களத்தை பார்வையிட்டது நீதிபதிகள் குழு

(தென்மராட்சி)

தென்மராட்சி மிருசுவில் பொதுமக்கள் படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழு சம்பவம் நடைபெற்ற இடத்தை நேற்று பார்வையிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர மற்றும் எச்.என்.பி.பி.வராவெள, சுனில் ராஜபக்ஷ ஆகிய மூன்று நீதிபதிகளும் பிரதி சட்டமா அதிபர் சரத் ஜயமான ஆகியோர் அடங்கிய குழுவினர் மிருசுவில் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

மிருசுவில் பகுதியில் கடந்த 2000ஆம் ஆண்டு 8 பொதுமக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருந்தார்கள். இந்த மரணங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 5 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆதாரமற்ற சவாலை ஆதாரத்துடன் சந்திக்கத் தயார் என்கிறார் முதல்வர்

(யாழ்ப்பாணம்)

அரசியல் சுயலாபம் தேட முயற்சிக்கும் மாநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் சவாலை எதிர்கொள்ளத் தயார் என மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.


உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் சவால் குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யாழ்.மாநகர சபையில் இடம் பெற்றுவருவதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாக பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு யாழ். மாநகரசபை முதல்வருக்கு மேற்படி சபையின் உறுப்பினரான விந்தன் கனகரத்தினம் சவால் விடுத்துள்ளார் என்ற செய்தியைக் கண்டேன். எனது நடவடிக்கையில் ஒழிவு

(11ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மக்களின் கொடிய துன்பத்தை நான் அறிவேன்; நிபுணர் குழு அறியாது

### கூட்டமைப்பு முன்னாள் எம்.பி. எஸ்.கனகரத்தினம்



(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரன் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே செயற பட்டார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மட்டுமன்றி அவரது முக்கிய தளபதிகள் அனைவரும் மேற்கத்தேய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே செயற்பட்டனர் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

லக்பிம சிங்கள நாளேட்டிற்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இராணுவத்துடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலிகள் பொதுமக்களை துப்பாக்கி முனையில் அடக்கியதோடு, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் தப்பியோட முனைந்த பொதுமக்களைச் சுட்டும் கொன்றனர்.

அரசாங்கம் பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையில் 'யுத்த சூனிய வலயங்களைப் பிரகடனப்படுத்தியிருந்தனர். இராணுவத்தினரும் பொதுமக்களைப் பாதுகாப்பதில் முன்னின்று செயற்பட்டதன் காரணமாகவே, பொதுமக்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குத் தப்பி வரத் தலைப்பட்டனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I,II இற்கான விடைகளும், கற்றல் குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளன.

# திருட்டில் ஈடுபட்ட மூன்று சிறுவர்கள் நன்னடத்தைப் பிரிவில் ஒப்படைப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி-முழங்காவில் பகுதியில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுவந்த 3 சிறுவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தினால் சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இம் மூன்று சிறுவர்களும் சேர்ந்து 4ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கோழிகளையும் மற்றும் மொரு இடத்தில் ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிகளையும் திருடினார்கள் என்ற குற்றச் சாட்டில் இவர்களை முழங்காவில் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்ற நீதிபதி,குறித்த சிறுவர்கள் 17, 16,12 வயதுடையவர்களாக காணப்பட்டமையால், அவர்களுடைய எதிர்காலத்தை கருத்தில் கொண்டு களவாடிய கோழிகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்ததுடன், இவர்களை எதிர்காலத்தில் நல்ல மனிதர்களாக உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் இவர்கள்மீதான வழக்குகள் மற்றும் குற்றச் சாட்டிலிருந்து இவர்களை விடுவித்து சிறுவர் இல்லங்களில் இணைத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து கரைச்சி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி இ. ராஜன் இம் மூன்று சிறுவர்களையும் பெறுப்பேற்று நன்னடத்தைப் பாடசாலையில் இணைப்பதற்கு ஏற்பாடுகளை செய்வதாக தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வழக்கை தாக்கல் செய்த முழங்காவில் பொலிஸார் குறித்த சிறுவர்களின் பெற்றோர்கள் இச்சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்பினையும் வசதிகளையும் வழங்க தவறியுள்ளனர். இதனாலேயே இச்சிறுவர்கள் இவ்வாறு தவறான வழியில் செல்கின்றார்கள். எனவே குறித்த பெற்றோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தனர். (110)

## உதவுமாறு கோரிக்கை

(காரைநகர்)

காரைநகரைச்சேர்ந்த 27 வயதுடைய இளம்யுவதி ஒருவருக்கு சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சைக்காக ஓ ($O^+$) பொசிற்றீவ் சிறுநீரகம் தேவைப்படுகின்றது. சிறுநீரகம் தானம் செய்யவிருப்பம் உள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். 0750430838, 0214904362, 0718475353 (14)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாரந்தனை வடக்கு, தம்பாட்டி ஊர்காவற்துறையைச் சேர்ந்த மஞ்சுளகுமார் ஜெனராக் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 893192557V) மற்றும் உந்துருளி ஆவணங்கள் என்பன கடந்த 26.04.2011 அன்று யாழ். வேம்படி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். (R/031)

## மருத்துவ விழிப்புணர்வு கண்காட்சி

(வடமராட்சி)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவ விழிப்புணர்வு கண்காட்சி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெறவுள்ளது. இதில் நீரிழிவு, மாரடைப்பு, மார்பு வலி,உயர்குருதி அமுக்கம்,புற்றுநோய், ஆஸ்துமா, வீதி விபத்துக்கள், முதலுதவி ஆகிய விடயங்கள் குறித்து விழிப்புணர்வும் விளக்கமும் அளிக்கப்படவுள்ளன. இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அனைவரையும் கலந்து கொண்டு, பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (100)

## ஆவணங்கள் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 7500 இரவல்கொடுத்தவருக்கு 5000 அபராதம் விதிப்பு

(ஊர்காவற்றுறை)

உரிய ஆவணங்கள் எதுவுமின்றி இரவில் மோட்டார் சைக்கிளை செலுத்திச்சென்ற நபருக்கும் மோட்டார் சைக்கிளை இரவல்கொடுத்தவருக்கும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜோய்மகிழ்மகாதேவா 12 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

ஊர்காவற்றுறையைச்சேர்ந்த நபரொருவர் தனது தேவையின் நிமித்தம் நண்பரொருவரிமிருந்து மோட்டார்சைக்கிளை வாங்கி ஓட்டிச்சென்றுள்ளார். அவ்வேளை வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மறித்து மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றைக்கேட்டபோது எதுவும் அவரிடம் இல்லாததை யடுத்து, அவரை கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். உரிய ஆவணங்கள் எதுவுமின்றி மோட்டார் சைக்கிளை செலுத்திய நபருக்கு 7500ரூபாவும், மோட்டார் சைக்கிளை இரவல் கொடுத்த உரிமையாளருக்கு, சாரதிஅனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவருக்கு மோட்டார்சைக்கிள் இரவல் வழங்கியதற்காக 5000ரூபாவும் தண்டம் விதித்து தீர்ப்பளித்தார். (14)

## பட்டிமன்றம்

(சாவகச்சேரி)

புன்னாலைக்கட்டுவன் நரசிம்ம வைரவர் ஆலய உற்சவகால சிறப்பு நிகழ்வாக யாழ் பட்டிமன்றக் குழுவினரின் சிறப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (10)

## நாளை மின்தடை

உயரழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், மல்லாம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங்கப்படலாம் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## தமிழ்தினப்போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய மட்ட தமிழ்தினப் போட்டிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் எழுத்தாக்கப்போட்டிகள் மற்றும் நாட்டுக்கூத்துப்போட்டிகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளையதினம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அனைத்து போட்டியாளர்களையும் நடுவர்களையும் தவறாது உரிய நேரத்துக்கு சமுகம் தருமாறு தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

## முகாமைத்துவ பயிற்சி வகுப்பு

(முல்லைத்தீவு)

சேவா லங்கா நிறுவனத்தினால் புளியம்பொக்கணை கமநல சேவை திணைக்களமூடாக குறித்த பிரதேச கமநல சேவைக்குட்பட்ட கமக்கார அமைப்பினருக்கு முகாமைத்துவ பயிற்சி வகுப்பொன்று நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி வகுப்பின் முதலாவது வகுப்பு நேற்று முன்தினமும் 2ஆவது வகுப்பு நேற்றையதினம் காலை 9 மணிமுதல் 2 மணிவரை நடைபெற்றதுடன், தொடர்ந்தும் இப்பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. (40)

## நிரந்தரக் கட்டடம் இருந்தபோதும் முன்பள்ளியில் இயங்கும் வைத்தியசாலை

(வட்டக்கச்சி)

கரைச்சிப்பிரதேச சபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வட்டக்கச்சி சில்வாவீதியில் அமைந்துள்ள முன்பள்ளியில் கரைச்சிப்பிரதேசசபை இலவச ஆயுர்வேத வைத்தியநிலையத்தை எட்டு மாதத்திற்கு மேலாக நடத்தி வருகின்றது. வட்டக்கச்சி சந்தைக்கருகாமையில் ஆயுர்வேத வைத்திய நிலையத்திற்கு நிரந்தரக் காணியில் கட்டடமும் உண்டு. இக்கட்டடம் கடந்த கால யுத்தத்தினால் சிறுசேதமடைந்து இருந்தது. அதனை சீரமைத்துள்ள நிலையிலும், அங்கு செல்லாது முன்பள்ளிக்கட்டடத்தில் இயங்குகின்றது. இதனால் முன்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களின் செயற்பாடுகளை ஆசிரியர்களினால் செயற்படுத்த முடியாமல் இருப்பதாகவும், வைத்திய நிலையத்திற்குள் வருகின்ற நோயாளர்கள் பாதணிகளைக்கழற்றாது உள்ளே வருவதால் மாணவர்களின் சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர் தெரிவிப்பதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிறார்களின் கல்வியினைக் கருத்தில் கொண்டு விரைவாக வைத்திய நிலையத்தினை அகற்றுமாறு அல்லது முன்பள்ளிக்கு முன்பாக உள்ள சனசமூக நிலையத்திலாவது இயங்கவைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றனர். (45)

## மாமரங்கள் கத்தரித்தல்; தொழில் நுட்பப்பயிற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விரிவாக்கல் நிலையத்தினால் நடத்தப்படும் மாமரங்களை கத்தரித்தலும் சிறப்பாக பயிற்றுவித்தலுக்குமான தொழில் நுட்பப்பயிற்சி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் அனைவரையும் கலந்து கொண்டு பயனடையுமாறு சாவகச்சேரி விவசாய விரிவாக்கல் நிலைய போதனாசிரியர் து. விஜயகுமார் அறிவித்துள்ளார். (11)

## இந்திய நிதியுதவியுடன் வலைத்தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாரிய மீன்பிடி வலை உற்பத்திச் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்காக இந்திய மத்திய அரசாங்கம் நிதி உதவிகளை வழங்கவுள்ளது.

தற்போது குருநகரில் உள்ள மீன்பிடித்துறை தொழிற்சாலை, யுத்த காலத்தில் பாதிப்படைந்துள்ளது. இதனை புனர்நிர்மாணிப்பதற்காக இந்திய மத்திய அரசாங்கம் 153 மில்லியன் ரூபாய்களை கடன்அடிப்படையில் வழங்க விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம், யாழ்ப்பாணத்தில் மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் நன்மை அடைவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாண கடலுற்பத்திகளில், இந்த வருடம் பாரிய அதிகரிப்பினை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

கடந்த வருடம் 20 ஆயிரம் மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்ட கடலுற்பத்திகளை, இந்த வருடம் 25 ஆயிர்ம மெட்ரிக் தொன்னாக அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

## வயல் வரம்புகளில் சட்டவிரோத மண் அகழ்வு

### தடுக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

யாழ். குடாநாட்டில் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாத எழுதுமட்டுவாழ்- ஒட்டுவெளி வயல்பரப்பு வரம்புகளை அகழ்ந்து மண் விற்பனை செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அப்பகுதி பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் பொலிஸாரின் கண்ணுக்குத் தெரியாமல் மிகவும் சாதுரியமான முறையில் இடம்பெற்று வருவதாகவும், இச்செயற்பாடுகளில் அவ்வூர் விவசாயிகள் சிலரும் ஈடுபட்டுவருவதாகவும் அவ்வூர் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மணலை ஏற்றிக்கொண்டு செல்வதற்கு அனுமதி எடுக்கவேண்டும் என்ற நடைமுறை உள்ளபோதிலும், வயல்களிலும் வெற்றுக்காணிகளிலும் மணலை அகழ்வது சட்டப்படி குற்றமாகும். எனவே இது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (11)

## மணல் ஏற்றியவருக்கு தண்டப்பணம் அறவீடு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - பூநகரிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற நபருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தினால் 15ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் வாடியடிப்பகுதியில் மணல் ஏற்றிவந்த மேற்படி நபரை கைது செய்த பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபருக்கு 15ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பளித்ததுடன், மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார். (110)

உண்டியலில் பணம் போடுவது பெரிதல்ல. அதைவிட ஒரு செலவும் இல்லாமல் காய்கறித் தோல்களை நேரே உயிருள்ள ஒருபசு வாயில் போடுவதில் நமக்குக் கிடைக்கும் நிறைவே அமைதி. -காஞ்சிப் பெரியவர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அருவருக்கச் செய்யும் அரசியல் பிழைப்பு

தந்தைசெல்வநாயகத்தின் 34ஆவது பிறந்த தினத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பெரும எடுப்பில் அனுஷ்டித்தார்கள்.

நினைவுக்கு எட்டியவரை கூட்டமைப்பினர் பரபரப்புக்காட்டியும், பத்திரிகை விளம்பரங்கள் செய்தும் நடத்திய செல்வாவின் நினைவு நிகழ்வு இதுவாகத்தான் இருந்தது.

இல்லாவிட்டால், காடுமண்டிக்கிடக்கும் செல்வாவின் சிலை வளாகத்தை துப்புரவு செய்து மாலை போடுவதும், அதை ஊடகங்களுக்கு அனுப்பிவிட்டும் இருந்துவிடுவார்கள்.

முக்கியமான அரசியல் காலச் சூழலில் தந்தை செல்வாவின் பெயரால் கூட்டமைப்பு முக்கியமான செய்தி ஒன்றை கூறப்போகின்றது என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம்தான்.

உதாரணத்துக்கு இலங்கை அரசு மீதான போர்க்குற்ற அறிக்கையை ஐ.நா. சபை வெளியிட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால் கூட்டமைப்பினரோ ஐ.நா. வின் விவகாரத்தைத் தொடாமலே அப்பிடி ஒரு நிகழ்ச்சியைத் தெரியாதவர்கள் போல் நடித்து விட்டார்கள் இந்த நடிப்புக்கு செவாலியே சிவாஜி விருது கொடுத்திருந்தாலும் தகும்.

போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசு மீது நடத்தவேண்டாமென சில கூட்டமைப்பு எம்.பிக்கள் அமெரிக்க தூதுவரிடம் கூறியதாக விக்கிலீக்ஸ் அண்மையில் கூறியிருந்தது. அநியாயத்துக்கு இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

அரசுடனான பேச்சுக்களில் தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதையும், ஏமாற்றங்களுடன் தான் மீண்டும் பேச்சுக்களில் பங்கு கொள்ளவுள்ளோம் என்பதைப் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், மாவை சேனாதிராஜாவும் எப்படியெல்லாம் பிரட்டி பிரட்டிச் சொன்னார்கள் என்பதை இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்த்துப் போகின்றது.

"தந்தை செல்வா அப்படிச் சொன்னார்" "இப்படிச் சொன்னார்" என்று வாய் கிழியச் சொன்ன இவர்கள் இப்போது தாங்கள் என்ன சொல்கின்றார்கள் என்பதை கடைசிவரை சொல்லவே இல்லை. தந்தை செல்வாவின் ஆத்மாவுக்கே வெறுத்துப்போயிருக்கும்.

தந்தைசெவ்வாவிற்குப் பிறகு இவர்களில் எவரும் நல்ல தலைவர்களாக உருவாகவில்லையா? நல்லதைச் செய்யவில்லையா? அதுக்காக முயற்சிக்கவும் மாட்டார்களா? இன்னும் எத்தனை காலத்திற்கு 'தந்தை செல்வா', 'ஈழத்து காந்தி' என்றெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை கூறி வெற்று வசனம் பேசுவதை சகிக்க முடியாமல் செல்வாவின் ஆத்ம என்ன படாதபாடு பட்டிருக்கும்.

உண்மையில் தமது தலைவனுக்கு மரியாதை செய்ய விரும்பினால் அவர் நேசித்த மக்களுக்கு ஏதாவது நன்மையைச் செய்துவிட்டு அதைச் சமர்ப்பணம் செய்யலாம். தமிழ் மக்களே இந்த அழிவு வடுக்களிலிருந்து நம்பிக்கையுள்ள இனமாக மீட்டெடுத்துவிட்டு அந்த அரசியல் வெற்றியைத் தந்தை செல்வாவின் பாதங்களில் சமர்ப்பணம் செய்யலாம்.

அதைவிட்டு விட்டு தந்தை செல்வாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு தமது வயிறு வளர்த்து தமிழ் மக்களைத் தவிக்கவிட்டு சுடுகாட்டு ஓலமிடுவதில் எந்தப்பயனுமில்லை தந்தைசெல்வாவாவின் ஆத்மா அவர்களை மன்னிக்காது. மக்கள் என்ன செய்வார்கள்?

-ஆசிரியர்-

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் மணியந்தோட்டத்தில் மீளக்குடியமர்ந்த 31குடும்பங்களுக்கு அரைநிரந்தர வீடுகள்

### ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் மணியந்தோட்டம் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்களில் ஜே-89 கிராமசேவகர் பிரிவில் 31 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகளும், மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகள் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் தெரிவித்தார்.

கிறிஸ்ரியன் எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வீடுகளையும் மலசலகூடங்களையும் அமைத்துக் கொடுக்கவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வுகளில் நல்லூர்ப் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன், ஜே/89 கிராம அலுவலர் ஞானேந்திரன், நல்லூர்ப் பிரதேச தொழில்நுட்ப உத்தியோகத்தர் காண்டீபன், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்ட உத்தியோகத்தர் எழில் மறறும அப்பகுதி சுகாதார பரிசோதகர் உட்பட பலர் கலந்துகொண்டனா.

ஏற்கனவே மணியந்தோட்டம் பகுதியில் சோஆ நிறுவனத்தினரின் நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட சுமார் 100 அரை நிரந்தர வீடுகள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அப்பகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (பா)

## கோணாவில் வீதியில் புதுமுறிப்புப் பாலம் முற்றாகச் சேதம்; போக்குவரத்தில் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டிப்போ கோணாவில் வீதியில் புதுமுறிப்புப் பகுதியில் உள்ள பாலம் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை வெளளம் காரணமாக முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளது. இதனால் அவ்வீதி வழியிலான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக நடந்த யுத்தத்தின் போது புலிகளினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட இப்பாலம், தற்காலிகமாக மரக்குற்றிகள் கொண்டு செப்பனிடப்பட்டிருந்தது. இருந்தும் கடந்த மாரி மழையின்போது பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த குறித்த பாலத்தினை இராணுவத்தினர் சீர் செய்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக முற்றுமுழுதாகச் சேதமடைந்து பஸ் போக்குவரத்தும் பா்லம் வரையுமே இடம்பெறுகின்றமையால், கிளிநொச்சி மேற்குப் பகுதி மக்கள் கிளிநொச்சி நகருடனான தங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதில் பெரும சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு இவ்வீதியில் கோணாவில் பாடசாலைக்கு அருகில் வீதியினைக் குறுக்கறுக்துப் பாய்ந்த வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பள்ளத்தில் பேருந்து ஒன்றும் தடம்புரண்டுள்ளமையால் போக்குவரத்துப் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலம் பற்றி பலமுறை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் எவ்வித பயனும் ஏற்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் மாரிகால மழைக்கு முன், குறித்த பாலத்தினைப் புனரமைக்காவிடின் கிளிநொச்சி நகருடனான தொடர்பு முற்றுமுழுதாகத் துண்டிக்கப்படும் எனக் கிளிநொச்சி மேற்குப்புற மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது கிளிநொச்சி மேற்குப் பிரதேசத்தை கிளிநொச்சி நகருடன் இணைக்கும் முக்கிய வீதியாகும். அத்தோடு பெருமளவான விவசாய உற்பத்திப் பொருடகளும் கிளிநொச்சிச் சந்தைக்கு இவ்வீதி வழியாகவே கொண்டு வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## தடுப்பு முகாம்களில் உள்ளோரை விடுவிப்பதற்கு உதவி செய்யுங்கள்

### அமைச்சரிடம் கோரிக்கை



(வவுனியா நிருபர்)

சமாதானத்தையம் ஜன நாயகத்தையும் இந்த நாட்டில் ஏற்படுத்திய பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே உரியது எனக் கைத்தொழில் மற்றம் வர்த்தக வாணிகத் துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் புனர்வாழ்வு பெற்ற இளைஞர்கள் 483 பேரை உறவினர்களுடன் இணைக்கும் வைபவத்தில் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமைச்சர் கலந்து கொண்டார்.

இந்த நாட்டின் ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நாங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி நாட்டைச் சுபீட்சமான பாதைக்குக் கொண்டு செல்ல நீங்களும் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள் என அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

சில தினங்களுக்கு முன்னர் நான் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தபோது பொதுமக்கள் பலர் என்னைச் சந்தித்து தடுப்பு நிலையங்களிலுள்ள தமது உறவுகளை விடுவிக்க உதவுங்கள் என உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்கள் என்றும் தெரிவித்தார்.(39)

## மீள்குடியேறிய மக்களுக்கு உதவும் நோக்கில் மன்னாரில் விவசாயப் பண்ணை நிர்மாணம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட முருங்கன் பிரதேசத்தில் 100 ஏக்கர் காணியில் மாதிரி விவசாயப் பண்ணை ஒன்றை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார் பெரிய குளம் பகுதிக்கு அருகிலேயே இந்த மாதிரி விவசாயப் பண்ணை உருவாக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்கு உதவும் வகையில் இந்தப் பண்ணை அமையவுள்ளதாக மன்னார் மறுவாழ்வுத் திட்டப் பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளர் பாலித விக்கிரம திலக தெரிவித்தார்.

நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் ஈவன் சில்வாவின் வழிகாட்டலில் இந்தத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. தென்னை, மா, பலா உட்படப் பல்வேறு வகையான மரக்கறி வகைகளும் இங்கு பயிர்ச் செய்யப்படவுள்ளன.

மீளக்குடியேறிய மக்களுக்கு நவீன விவசாய முறைகளும் இங்கு போதிக்கப்படும். அத்தோடு நவீன விதை வகைகளும அவர்களுக்கு அறிமுகம் செய்யப்படும்.

நெற்பயிர்ச் செய்கையோடு இணைந்ததாக ஏனைய பயிர்களையும் உள்ளடக்கி 3 ஆயிரம் ஏக்கரில் இந்தப் பண்ணை அமையவுள்ளது. 2012 கால போகத்தின் போது 15 ஆயிரம் ஏக்கரிலும், 2012 பெரும் போகத்தின்போது 30 ஆயிரம் ஏக்கரிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் அமையவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நெறிப்படுத்தலின் கீழ் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக கால்வாய்களைச் செப்பனிடும் பணிகளும், சிறு குளங்களை நிர்மாணிக்கும் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மே தின கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மேதினக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கட்சியின்பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மற்றும் க.தணிகாசலம், கா.பஞ்சலிங்கம், கே.ஏ.சீவரட்ணம், த.பிரகாஷ், மு.தியாகராஜா, ரி.வி. கிருஷ்ணசாமி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் "டெங்கு" பரவும் அபாயம் 129நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்

## யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிமனை தகவல்

யாழ்.குடாநாட்டில் தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழையினால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துவருகிறது. இதனால் எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது. எனவே இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் ஏப்ரல் மாத நடுப் பகுதிவரை 129 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இக்காலப்பகுதியில் 01 இறப்பும் ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மழைதொடங்கியுள்ளதால் எதிர் வரும் வாரங்களில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கலாம். எனவே காலம் தாழ்த்தாது உடனடியாக டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முழு வீச்சில் முன்னெடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் அவசர தேவையாகும்.

டெங்கு நோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குவது மிக அவசியம்.

**டெங்கு தடுப்பு நடவடிக்கை**

1. சகல வைத்தியசாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் சுத்திகரிப்பு பணி இடம்பெற வேண்டும். இதற்கென சிரமதானங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு: வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள்)

2. சகல திணைக்கள / நிறுவன வளவுகளிலும் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணி இடம்பெற வேண்டும் (பொறுப்பு: திணைக்கள /நிறுவனத் தலைவர்கள்)

3. பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் துப்பரவு செய்ய வேண்டும் (பொறுப்பு: உள்ளூராட்சி மன்ற செயலாளர்)

4. பிரதேச /கிராம மட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்களினை கட்டுபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வாரம் ஒருமுறை மீளாய்வு செய்தல் (பொறுப்பு: பிரதேச செயலர்கள, கிராமசேவை உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள்)

5. திண்மக் கழிவுகள் கிரமமாக உரிய முறையில் அகற்றப பட வேண்டும் (பொறுப்பு: உளளூராட்சி மன்ற செயலாளர்கள்)

6. பாடசாலைகளில் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப பட வேண்டும். (பொறுப்பு: பாடசாலை அதிபர்)

7. தனியார்கல்வி நிலையங்களிலும் டெங்கு ஒழிப்பு சுத்திகரிப்புப் பணிகள் இடம் பெற வேண்டும். (பொறுப்பு: தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள்)

8. ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன்கள் அழிக்கப்பட்டு சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப் பட வேண்டும் (பொறுப்பு வீட்டு உரிமையாளர்கள்/குடியிருப்பவர்கள்)

9. கிராம மட்டத்தில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் கிராமத்தில் உள்ள பொது மக்கள் துப்பரவு செய்ய வேண்டும் (பொறுப்பு: கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள்)

10. மேற்படி சுத்திகரிப்பு பணிகளிற்கு ஆலோசனைகளை வழங்கி பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வை செய்வார்கள் (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள்)

11. டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு சுகாதார வைத்திய அதிகாரிகள்/பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பாடசாலைகளில் காலை ஒன்று கூடலில் இதற்காக நேரம் ஒதுக்கப்பட வேண்டும். (பொறுப்பு: வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள்/பாடசாலை அதிபர்கள்)

12. சகல வைத்தியசாலைகளிலும் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளரை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு: வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள்)

13. டெங்குநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். (பொறுப்பு: உளளூராட்சி மன்ற செயலாளர்கள்,சுகாதார வைத்திய அதிகாரிகள். அரச சார்பற்ற நிறுவனங்கள்)

14. பொது சுகாதார பரிசோதகர்கள/குடும்பநல உத்தியோகத்தர்கள் தத்தமது பிரிவிலுள்ள வீடுகளுக்கு வீட்டுத தரிசிப்பிற்குச் செல்லும்போது நுளம்பு பெருகும் இடங்களை இனங்காட்டி அழிக்க ஆலோசனை வழங்க வேண்டும். (பொறுப்பு: பொது சுகாதார பரிசோதகர்கள்/குடும்பநல உத்தியோகத்தர்கள்)

15. நுளம்பு பெருகும் இடங்களிற்கு BTI (பக்ரீரியா) விசிற நடவடிக்கை எடுத்தல் (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள்)

16. யாழ்.மாவட்டத்தில் பல காணிகள் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பின்றி பற்றைக்காடாக காட்சியளிக்கினறன. இவற்றில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாக வாய்ப்புண்டு. எனவே இக்காணிகளின் உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பிற்கு பொறுப்பாக உள்ளவர்கள் உடனடியாக இக் காணிகளில் நுளம்பு பெருகுமிடங்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் உள்ளூராட்சி மன்றங்கள் பொருததமாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மேற்படி நடவடிக்கைகள் யாவற்றுக்கும் தொழில் நுட்ப உதவி/ஆலோசனைகளை வழங்குதல் (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள். பொதுச் சுகாதார பரி சோதகர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)

17. தற்போது இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தக் கடுமையான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தபட்டுள்ளன. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக உடந்தையாக இருப்பவர்களுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம். ஆனால் நாம் சட்டத்தின் உதவியின்றி பொது மக்களின் ஒத்துழைப்புடனேயே இங்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புகின்றோம். ஆனால் இதற்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்குநோய் பரவ உடந்தையாக இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைத் தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியமாகுமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# காணி உறுதிகள் இன்மையால் கைநழுவும் நிரந்தர வீடுகள்

(கிளிநொச்சி)

பரந்தன் கோரக்கன்கட்டுக் கிராமத்தில் வாழும் மக்கள் தங்களுக்கு காணி உறுதிகள் இலலாமையால் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான வசதிகள் கை நழுவிப் போவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் 100 இற்கு மேற்பட்ட மக்கள் காணி உரிமைப் பத்திரங்கள் இன்றி வாழவதாகவும் இதில் 30 குடும்பங்கள் தற்காலிகமான வீடுகள் கூட இல்லாத நிலையில் தறப்பாள்கள் கொண்டு அமைத்த கூடாரங்களில் வாழநது வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் சிலருக்கு காணி உறுதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களுக்கு இந்த உறுதிகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் காணி உறுதிப் பத்திரங்கள் இல்லாத மக்களுக்கு வீடு கட்டுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத நிலையில் கிராம சேவையாளர்கள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகினறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (40)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை; முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை

## என்கிறார் யாழ்.பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் ஆரம்பத்திலிருந்து இதுவரை எந்தவிதமான சட்டவிரோத மதுபான விற்பனை உற்பத்தி தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் மதுவரித்திணைக்களத்தினர் அவ்வப்போது சோதனைகளை நடத்திச் சட்டவிரோத மதுபாவனை உற்பத்தி, விற்பனவு கண்டுபிடிக்கப் பட்டு கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என மதுவரித் திணைக்களத்தின யாழ்ப் பாணப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

சட்டவிரோத மதுபாவனை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த காலங்களில் ஒருநாளில் மட்டும் பல முறைப்பாடுகள் கிடைத்தன. ஆனால் தற்போது அப்படி அல்ல பொலிஸாரினதும் மதுவரித் திணைக்களத்தினதும் தீவிர சோதனை நடவடிக்கையால் தற்போது சட்டவிரோத மது பாவனை வெகுவாகக் குறைந்துள்ளது. குறிப்பாக கசிப்பு உற்பத்தி முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ளது.

இளம் சந்ததியினரே தற்போது அதிக மதுபாவனை யில் ஈடுபட்டுள்ளனர். இது தவிர்க்கப்பட வேண்டும். பெற்றோர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். இதன் மூலம் அவர்களை நல்வழிப் படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (கா)



பெயார்ஸ் பாதுகாப்பான கரங்கள் திட்டத்தின் மூலம் யாழ்.போதனாவைத்தியசாலையில் குழந்தைகள் பிரிவு முழுமையாக புனரமைக்கப்பட்டு நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வின் போது...

# பாடசாலை மட்டத்திலான "உங்களுக்கு தெரியுமா?" போட்டி

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையிலான உங்களுக்குத் தெரியுமா போட்டியானது பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ளது என யாழ் வலயக்கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியானது போசாக்கு, சுகாதாரம், HIV (AIDS), குடிநீர் போன்ற விடயங்களை உள்ளடக்கிய தாக இடம்பெறவுள்ளது.

பாடசாலை மட்டத்திலான இப்போட்டியில் தரம் 10 மாணவர்கள் அனைவரும் அன்றைய தினம் நடைபெறும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற வேணடும்.

இவ் வினாத்தாள் புள்ளியிடப்பட்டு பாடசாலை ரீதியாகத் தெரிவாகும் முதல் 05 மாணவர்களது பெயர் விபரங்களை வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவில் சமர்ப்பிக்குமாறும் பாடசாலைகளுக்கு அறிவுறுததப் பட்டுள்ளது. (03)

## கஸ்தூரியார் வீதி கடைத்தொகுதி விவகாரம்

# முன்னாள் ஆணையாளரிடம் விளக்கம் கோருகிறார் யாழ். மாநகர முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள 118, 118 A, 118B, 120, 120 A, 122 (பழைய இல A/B அல்லது 114/116) கடைத் தொகுதிகள் சம்பந்தமாக முன்னர் யாழ். மாநகர சபை ஆணையாளரும் தமிழரசுக் கட்சி உதவிச் செயலாளருமான சி.வி.கே. சிவஞானத்துக்கு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது -

மேற்படி கடைத்தொகுதிகள் அமைந்துள்ள இடங்களையும் சேர்த்து பலமாடிக் கட்டட கடைத் தொகுதியொன்று அமைக்க ஏற்பாடாகி வருவதை நீங்கள் பத்திரிகை மூலமாக அறிந்திருப்பீர்கள்.

இந்தக் கட்டடத்தொகுதி நிர்மாணத்தை நிறுத்திவிடும் நோக்கில், இதற்கு முறையாகக் கேள்வி கோரல்கள் எவையும் இடம்பெறவில்லையென உங்கள் கட்சி மாநகர சபை உறுப்பினர்கள் ஊடகமொன்றின் அனுசரணையுடன் ஏற்படுத்தி வரும் இடைஞ்சலுடன், இப்போது இன்னொரு இக்கட்டான நிலைமையும் மாநகர சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான நிலைமையைச் சட்டப்படி தீர்ப்பதற்கு உங்களுடைய எழுத்து மூலமான விளக்கமொன்றைக் கோரி இக் கடிதம் எழுதப்படுகிறது.

மேற்படி கடைத் தொகுதி கள், நீங்கள் மாநகர சபை ஆணையாளராயிருந்த 2006 காலப்பகுதியில், (1) எந்தவித பகிரங்க கேள்வி கோரல்களுமின்றி, (2) பெரும்பாலும் திகதியிடப்படாத ஒப்பந்தங்கள் மூலம், (3) அவ் ஆதனங்களில் சட்டபூர்வமின்றி குடியிருந்து வியாபாரம் செய்து வந்திருந்தவர்களுக்கு (4) 1.5.2006 இலிருந்து 5 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் சட்ட ஆலோசகரின் கருத்துப்படி, இதில் நீங்கள் உங்கள் அதிகார வரம்புகளை மீறி, முறைகேடாகச் செயற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தக் கடைத் தொகுதிகளில் இதற்கு முன்னைய குடியிருப்பாளர்களிடமிருந்து வருமதியாகவிருந்த லட்சக், கணக்கான வாடகை நிலுவையையும் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பதும் தெரிய வருகிறது.

தற்போது இந்தக் கடைத் தொகுதிகளின் மூல குத்தகை உரிமையாளர்கள், தங்களுக்கே இந்தக் கடைத் தொகுதிகளின் குத்தகை உரிமம் தரப்பட்டிருக்க வேண்டுமென்றும், நீங்கள் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று சட்டபூர்வமின்றி அதன் தற்போதைய உரிமையாளர்களுக்கு இக் கடைத் தொகுதிகளைக் குத்தகைக்குக் கொடுத்திருந்ததாகவும் முறையிடுகிறார்கள்.

உங்களுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டை அவர்கள் ஏற்கனவே முன்னாள் உள்ளூராட்சி அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோருக்கு எழுத்தில் தெரிவித்திருந்ததை நீங்கள் அறியாமலிருக்க வாய்ப்பில்லை.

இந் நிலைமைகளில் இச் சிக்கலைச் சட்டப்படி தீர்த்துக் கொள்வதற்கு இயலுமாக தயவு சய்து பின்வரும் விடயங்களுக்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(1) மேற்படி கடைத் தொகுதிகளை தற்போதைய குத்தகை உரிமையாளர்களுக்கு குத்தகைக்குக் கொடுதத போது ஏன் நீங்கள் பகிரங்க கேள்வி கோரல்கள் எதனையும் செய்யவில்லை?

(2) மேற்படி உங்களுடைய அதிகார வரம்புகளை மீறி, எந்த வித கேள்வி கோரல்களுமின்றி இக் கடைத் தொகுதிகளின் தற்போதைய உரிமையாளர்களுக்கு இக் கடைத் தொகுதிகளைக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு நீங்கள் முடிவெடுத்தமைக்குக் காரணமென்ன?

(3) மேற்படி கடைத் தொகுதிகளின் தற்போதைய குத்தகை உரிமையாளர்கள், சட்டபூர்வமின்றி இக் கடைகளில் குடியிருந்து வியாபாரம் செய்து வந்தது தெரிந்திருந்தும், அவர்களுக்கே இக்கடை களின் சட்டபூர்வ குத்தகை உரிமையைக் கொடுப்பதற்கு நீங்கள் முடிவெடுத்தமைக்குக் காரணமென்ன?

(4) இக் கடைகளின் மூல குத்தகை உரிமையாளர்களும், அதன் தற்போதைய குத்தகை உரிமையாளர்களும் மாநகர சபை விதிகளை உதாசீனம் செய்து, உரிமை மாற்றங்கள் செய்தே இக் கடைத் தொகுதிகளில் வியாபாரம் செய்து வந்துள்ளார்கள்.

இந் நிலைமைகளில் இக் கடைத் தொகுதிகளின் மூல குத்தகை உரிமையாளர்கள், இக் கடைத் தொகுதிகளின் குத்தகை உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தும், அவர்களுக்குத் தெரியாமல் இக் கடைத் தொகுதிகளை அதன் தற்போதைய உரிமையாளர்களுக்குக் குத்தகைக்கு கொடுக்க நீங்கள் முடிவெடுத்தது ஏன்?

(5) மேற்படி கடைத் தொகுதிகளை ஆகக் கூடிய காலமான 5 வருட காலத்திற்கு எந்த வித கேள்வி கோரல்களுமின்றி உங்களுடைய அதிகார வரம்பு களை மீறிக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு முடிவெடுத்தமைக்கான காரணமென்ன?

(6) இக் கடைத் தொகுதிகளில், வரி மதிப்பீட்டு இலக்கம் 120 இல் அமைந்துள்ள கடைத் தொகுதிக்கு சிவமூர்த்தி என்பவர் கேள்வி கோர எழுத்து மூலம் விருப்பம் தெரிவித்திருந்தும், அவருக்குத் தெரியாமல் இக் கடைத் தொகுதியை இன்னொருவருக்குக் கொடுத்தமைக்குக் காரணம் என்ன ?

மேற்படி கேள்விகளுக்கான விளக்கங்களை இக் கடிதத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எமக்கு எழுத்தில் தெரியப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்படி முறைகேடு தொடர்பின், எங்களிடமுள்ள ஆவணங்களைப் பார்வையிட விரும்பின் தயவுசெய்து எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

இவ் விடயம் தற்போது பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளபடியினால், இக் கடிதத்தையும் நாங்கள் பகிரங்கப்படுத்துகிறோம் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

உங்களுடைய ஒத்துழைப்பிற்கு நன்றி என்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருங்கள்

## சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்து

(அச்சுவேலி)

அண்மை நாட்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாகப் பெய்து வரும் மழையைத் தொடர்ந்து மீண்டும் டெங்கு நுளம்புகள் பரவக் கூடும் என்ற அச்சநிலை காரணமாகப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் தமது குடியிருப்புப் பகுதிகளையும் அயலில் உள்ள வெற்றுக் காணிகள் ஆகியவற்றைத் துப்புரவாகப் பேணிக்கொள்வதன் மூலம் நுளம்புத் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப்பெற ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதாரப் பகுதியினரால் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

குறிப்பாக நீர் தேங்கக் கூடிய பொருட்களை அகற்றிக் கொள்வதுடன், நீர் தேங்கி நிற்கக்கூடிய பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை மூடிச் சீர்செய்யுமாறும் சுகாதாரப் பரிசோதகர்களால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றது. (03)

## இயங்க மறுக்கும் கடிகாரங்கள்

(கொக்குவில்)

யாழ். நகரில் மணிக்கூட்டுக் கோபுரக் கடிகார மும் இம்மாத முற்பகுதியில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் செபேஸல் நிறுவியிருந்த சிறிய மணிக்கூட்டுக கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள இரு பக்கக் கடிகாரங்களும் பழுதடைந்துபோயுள்ளன.

ஏற்கனவே யாழ். நகரின் பிரதான மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள நவீன எலெக்ரோனிக் நான்கு பக்கக் கடிகாரங்களும் பழுதடைந்து காணப்படுகிறது.

இதனால் அவ்வப் பகுதி களில் பிழையான நேரங்களைக் காட்டிக் கொண்டிருக்கும் கடிகாரங்களால் மக்கள் பல அசெளகரியங்களுக்கு ஆளாக நேரிடுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (68)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(அச்சுவேலி)

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமாகிய வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணிக்கு இடம்பெறும் ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து சங்க உறுப்பினர்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று அதைத் தொடர்ந்து மதியபோசன நிகழவு இடம்பெறும்.

தொடர்ந்து பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. எனவே, உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (03)

## முடிவுறும் நிலையில் உள்ள பால புனரமைப்பு வேலைகள்

(கொக்குவில்)

யாழ். மணிக்கூட்டுக் கோபுரச் சுற்றுவட்டத்தில் பழுதடைந்த பாலம் திருத்த வேலைகள் நிறைவடையும் நிலையிலுள்ளது. கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக மேற்படி பாலத்தின் நிர்மாண வேலைகள் நடைபெற்று வந்தது.

இதனால் அவ் வீதியைப் பயன்படுத்தும் யாழ். கண்டி வீதியூடான போக்குவரவுகள் வெவ்வேறு வீதிகள் மார்க்கமாக நடைபெற்று வந்தன.

கச்சேரி, யாழ்ப்பாணம், கொடிகாமம், கொழும்புத் துறை போன்ற உள்ளூர் பஸ் சேவைகளும் இவ் வீதியையே பயன்படுத்தி வந்தன. இதனால் யாழ். நதிமன்றம், பொது நூலகம், யாழ். மத்திய கல்லூரி, சுப்பிரமணியம் பூங்கா போன்ற இடங்களுக்குச் செல்பவர்களின் போக்குவரவில் அசெளகரியம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (68)

## வீடுகள் கையளிப்பு நிகழ்வு

(கொக்குவில்)

யாழ். தீவகம், அல்லைப்பிட்டியில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் அமைத்துள்ள நிரந்தரக் குடியிருப்பு வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் அருட்பணி ஜே.எக்ஸ். பேனாட் றெக்னோ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் செளந்தரநாயகம், சிறப்பு விருந்தினராக செடெக் கரித்தாஸ் தேசிய இயக்குநர் அருட் திரு ஜோர்ஜ் சிகமொனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (68)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(29.04.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 16 ஆம் நாள்.

இராகுகாலம் 10.28–11.58, சுபநேரம் 5.58 –7.28,

நட்சத்திரம் பூரட்டாதி மு.இ 7.32 வரை,

திதி: துவாதசி முழுநாளும்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:–** காரியத்தடை, அதிக செலவு, பண வரவு.

**ரிஷபம்:–** மேலோர் பாராட்டு, முயற்சி வெற்றி, நல்ல செய்தி.

**மிதுனம் :–** வீணான கற்பனை, பண வரவு, மனக்குழப்பம்.

**கடகம்:–** மனச் சஞ்சலம், பணச் செலவு, கடின உழைப்பு.

**சிம்மம்:–** அதிக செலவு, முயற்சி பலிதம், நண்பர் உதவி.

**கன்னி :–** காரிய வெற்றி, பண வரவு, நல்ல செய்தி.

**துலாம் :–** வீண் பயம், பொருள் இழப்பு, அதிக செலவு.

**விருச்சிகம்:–** பண வரவு, முயற்சி வெற்றி, காரிய சித்தி.

**தனுசு:–** கடின உழைப்பு, வீண் பயம், காரியத் தடை.

**மகரம்:–** முயற்சி பலிதம், பண வரவு, நல்ல செய்தி.

**கும்பம் :–** காரிய வெற்றி, வீண் செலவு, நல்ல செய்தி.

**மீனம்:–** பண வரவு, வீண் விரயம், அதிக செலவு.

# நிபுணர் குழு அறிக்கை முழுமையாக நிராகரிப்பு

# உள்ளடக்கம் குறித்துப்பேச விரும்பவில்லை

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

**நிபுணர்குழு இலங்கை தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ளமையை உலகில் தோன்றியுள்ள புதுவிதமான நவீன அரசியல் காலனித்துவ முயற்சி என்று கூறலாம்.**

இவ்வாறு ஒரு அறிக்கையை வெளியிடுவதற்கு ஐ.நா. வின் யாப்பு சட்டம் மற்றும் பண்பியல் ரீதியாக எவ்விதமான உரிமையும் இல்லை என்று சிறிலங்கா-சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த அறிக்கையை நாங்கள் முழுமையாக நிராகரிப்பதனால் அதன் உள்ளடக்கம் குறித்துப் பேசவிரும்பவில்லை. எனினும் ஐ.நா. நிபுணர் குழு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களில் ஒன்றையாவது நிரூபிக்கட்டும் பார்க்கலாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் அழகப்பெரும மேற்கண்ட விடயங்களைக் கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது: ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவுக்கு இவ்வாறு அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு எவ்விதமான உரிமையும் இல்லை என்று நாங்கள் ஆரம்பத்திலிருந்து கூறிவருகின்றோம்.

அதாவது இவ்வாறு ஒரு அறிக்கையை வெளியிடுவதற்கு ஐ.நா. வின் யாப்பு, சட்டம் மற்றும் பண்பியல் ரீதியாக எவ்விதமான உரிமையும் இல்லை. எனவே அந்த அறிக்கையை நாங்கள் நிராகரிப்பதனால் அதன் உள்ளடக்கங்கள் குறித்து பேசிக்கொண்டிருக்க விரும்பவில்லை.

ஆனால் ஐ.நா. நிபுணர் குழு முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களில் ஒன்றையாவது நிரூபிக்கட்டும் பார்க்கலாம். ஆதாரமற்ற வகையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது இதனை உலகில் தோன்றியுள்ள புதுவிதமான நவீன அரசியல் காலனித்துவம் என்று கூற முடியும். நாங்கள் யுத்தம் முடிவடைந்ததன் பின்



னர் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை நடத்திவருகின்றோம்.

நாங்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருக்கின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் சபை, நாட்டில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

30 வருடகால யுத்தத்தின் பின்னர் நாட்டில் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு தற்போது தான் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

## நிபுணர் குழுவிற்கு எதிராக ஆதரவுதிரட்ட உயர்மட்டக்குழு இந்தியா பயணம்

(கொழும்பு)

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கைக்கு எதிராக ஆதரவு திரட்டும் நோக்கில் அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று மிகவிரைவில் இந்தியா செல்லவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மிகவிரைவில் இரு நாடுகளினதும் பிரதிநிதிகளுக்கு இடையில் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பான சந்திப்பு இடம்பெறவுள்ளதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.


நெருக்கடியான இந்தக் கட்டத்தில் இலங்கையின் தலைவர்கள் சிலர் இந்தியாவுக்குச் சென்று பேசுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அந்த வட்டாரங்கள் கொழும்பு ஆங்கில நாளிதழிடம் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்த அறிக்கையில், ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையை கவனமாக ஆராய்ந்து வருவதாகவும், இது தொடர்பாக இலங்கையுடன் பேசப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது.

முன்னதாக, இலங்கையின் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழு புதுடில்லி செல்வதற்கு விரும்பியதாகவும், ஆனால் அவர்களை சந்திக்க இப்போதைக்கு நேரமில்லை என்று இந்தியா கூறி விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உத்தியோகபூர்வ கருத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைக்கான முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸின் கருத்துக்களை ஐக்கிய நாடுகள் அமைப்பின் உத்தியோகபூர்வ கருத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது என அந்த அமைப்பின் தற்போதைய பேச்சாளர் டொம் ஹோக்லி தெரிவித்துள்ளார்.

கோர்டன் வைஸின் கருத்துக்கள் தனிப்பட்டவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


குறிப்பிட்ட காலப்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலைகளின் அடிப்படையில் அவர் கருத்து வெளியிட்டிருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், கோர்டன் வைஸ் சில சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது குறித்து இந்தியா அறிந்திருந்தாகவும், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இந்தியாவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் கோர்டன் வைஸ் வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பணியாளர்களின் பாதுகாப்புக் காரணமாக துல்லியமான இழப்பை திரட்டமுடியவில்லை

## என்கிறார் ஐ.நா.பேச்சாளர்



(கொழும்பு)

இலங்கை அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்டத்தில், பொது மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக ஐ.நாவினால் துல்லியமான விபரங்களைப் பெறமுடியவில்லை என்று ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெர்ஸ்க்கி தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் அவர் நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களால், அந்த நேரத்தில் ஐ.நாவின் பணியாளர்களை இலங்கையில் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து நாம் விலக்கிக் கொள்ளநேரிட்டது.

அதனால் போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட துல்லியமான இழப்பு விபரங்களை எம்மால் திரட்ட முடியாது போனது.

இலங்கை அரசாங்கம் ஐ.நா பணியாளர்களுக்கு அங்கே பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க முடியாது என்று கூறி விட்ட நிலையில், இழப்புகள் பற்றிய விபரங்களை அவர்களால் திரட்டக் கூடிய நிலை இருக்கவில்லை.

நிபுணர்குழுவின் அறிக்கையில், கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் விரைவில் தமது மூத்த ஆலோசகர்களுடன் மீளாய்வு செய்யவுள்ளார் என்றும் மார்ட்டின் நெர்ஸ்க்கி மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை மீதான யுத்தக்குற்ற விசாரணை பாதிப்புக்களை ஏற்படுத்துமென எச்சரிக்கை




(கொழும்பு)

இலங்கை மீதான யுத்தக் குற்ற விசாரணைகள், பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் என, த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் இலங்கை தொடர்பிலான அறிக்கை குறித்து, த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளியாகி உள்ள நிலையில், இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

எனினும் இந்த அறிக்கை, யுத்தக் குற்றம் சார்ந்த விடயங்களிலேயே அவதானம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இலங்கையின் ஜனாதிபதி தவணை முறை மாற்றப்பட்டமை உள்ளிட்ட அரசியல் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்ற வன்னி யுத்தம் குறித்த விமர்சகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வன்னி யுத்தத்தைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் பிழையான வழி ஒன்றைப் பின்பற்றிச் செல்வதாக த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வன்னி யுத்தத்தில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கும் போது, அது மேலும் பிழையான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


தற்போது இந்த அறிக்கைக்கு எதிராக, இலங்கையில் தேசிய ரீதியாக ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்புக் கருத்துக்களும் வெளிப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், சர்வதேச அமைப்புகள், இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் குறைவான அவதானத்தைச் செலுத்தி, ஏனைய அரசியல் விவகாரங்களில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என, அந்தப் பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறு செய்யப்படும் போது, இலங்கையில் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகமான அரசியல் சூழ்நிலை உருவாக ஏது நிலைகள் ஏற்படும் எனவும், த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைத் தவிர்த்து, வெறும் தவறுகளைச் சுட்டிக்காட்டி அழுத்தம் கொடுக்கும் போது, இலங்கையில் மீண்டும் குழப்ப நிலைகள் தோன்ற வழி வகுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு வருட ஒப்பந்தத்தின் மூலம் இந்திய அணி பயிற்சியாளர் நியமனம்



(புதுடில்லி)

இந்திய அணிக்கு புதிய பயிற்சியாளராக டங்கன் பிளட்சர் நியமிக்கப்பட்டுள்ளார். இதை இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் என்.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணியின் முன்னாள் கட்டனான பிளச்சர் 2 ஆண்டுகளுக்கு இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி ஜுன் மாதம் 4 ஆம் திகதி முதல் ஜுலை 10ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடரில் இருந்து அவர் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்பார். ஸ்டீபன் பிளமிங், அன்டி பிளவர் ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி விட்டு பிளட்சர் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியை பிடித்துள்ளார்.

கிர்ஸ்டனின் பரிந்துரை அவருக்கு இருந்தது. பிளச்சர் இதற்கு முன்பு இங்கிலாந்து அணிக்குப் பயிற்சியாளராக இருந்துள்ளார்.

2005ஆம் ஆண்டு ஆசஷ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து சிறப்பு வாய்ந்த வெற்றி பெற்றபோது இவர் அந்த அணியின் பயிற்சியாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சக்கர நாற்காலி ரெனிஸ் இலங்கை அணி வெற்றி




சக்கர நாற்காலி டென்னிஸ் சம்மேளனத்தின் 27 ஆவது சுற்றுப் போட்டியில் இலங்கைப் போட்டியாளர்கள் ரஷ்யாவை வெற்றிகொண்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரட்டையர் போட்டியில் இலங்கையின் போட்டியாளர்கள் உபாலி ராஜகருணா மற்றும் டி.எம். காமினி ஆகியோர் ரஷ்யாவின் போட்டியாளர்களை 6:0, 6:1 என்ற விதத்தில் தோற்கடித்தனர். நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்தப் போட்டித்தொடர் எதிர்வரும் முதலாம் திகதி வரை தென்னாபிரிக்காவின். பெட்டோரியாவில் இடம்பெறுகிறது.

# பட்மின்ரன் உடை விவகாரம் பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு

(கராச்சி)

பட்மின்ரன் வீராங்கனைகள் அனைவரும் ஜுன் 1ஆம் திகதி முதல் குட்டைப் பாவாடை அணிந்தே விளையாட வேண்டும் என சர்வதேச பட்மின்ரன் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் மற்றும் இந்நாள் வீராங்கனைகள் சர்வதேச பட்மின்ரன் சம்மேளனத்தின் புதிய உடை விதிமுறைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு, நியாயமற்றது என்றும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் இருந்தும் இதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பட்மின்ரன் வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்துதான் விளையாட வேண்டும் என்ற சர்வதேச பட்மின்ரன் சம்மேளனத்தின் முடிவுக்கு பாகிஸ்தான் பட்மின்ரன் அமைப்புக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சர்வதேச பட்மின்ரன் சம்மேளனத்தின் இந்த முடிவு இஸ்லாமிய மதக் கோட்பாட்டிற்கு எதிரானது. எனவே பாகிஸ்தான வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்து விளையாடமாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பட்மின்ரன் அமைப்பின் துணைத் தலைவர் நகி மோஷின் கூறுகையில், வீராங்கனைகள் குட்டைப் பாவாடை அணிந்துதான் விளையாட வேண்டும் என்பதை இஸ்லாமிய நாடுகளால் ஏற்றுக் கொளள முடியாது. அவ்வாறு கூறினால் பாகிஸ்தான் பட்மின்ரன் அமைப்பை நீக்கிவிடுவார்கள். அப்படிச் செய்தால் இந்தப் பிரச்சினையை ஆசிய பட்மின்ரன் சம்மளனத்திடம் எடுத்துச் செல்வோம். குட்டைப் பாவாடை அணிந்துதான் விளையாட வேண்டும் என வீராங்கனைகளைக் கட்டாயப்படுத்தக் கூடாது. எங்களின் மத நம்பிக்கைகள் அதை அனுமதிக்காது. அதை அமுல்படுத்துவது மிகவும் கடினமானது என்றார்.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரில் முன்னணி வீரர்கள் விளையாட வேண்டும்

மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் விளையாடவேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) விருப்பம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.சி.சி. யின் தலைமை நிர்வாக அதிகாரி ஹாரூன் லார்கட் கூறியதாவது:-

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் ஆடாமல் இருப்பது சரியல்ல. இதனால் கிரிக்கெட்டின் தன்மை பாதிக்கப்படும்., முழுப்பலம் பெற்ற இந்திய அணி ஆடவேணடும்.

ஒன்று அல்லது 2 வீரர்கள் ஓய்வு கேட்டால் பரவாயில்லை. 5 அல்லது 6 வீரர்கள் விளையாடாமல் ஓய்வுகேட்பது சரியல்ல என அவர் கூறினார்.

International Cricket Council

# பரிசுத் தொகை அதிகரிப்பு

28 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணி வீரர்களுக்கு தலா ரூ. 1 கோடி பரிசளிக்கப்படும் என பி.சி.சி. உத்தரவிட்டது.

ஆனால் பரிசுத்தொகை குறித்து வீரர்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவியதாக பரவலாக செய்திகள் வெளியாகின. இந்நிலையில் வீரர்களுக்கான பரிசுத தொகையை ரூ.2 கோடியாக அதிகரித்து உத்தரவிட்டுள்ளது.

# பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்டப் போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

கிளிநொச்சி மாவட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த திங்கட் கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு -

15 வயது பிரிவு ஆண்கள்

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை.

பெண்கள்

கிளிநொச்சி கண்டாவளை மகா வித்தியாலயம், வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை, கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

17 வயது பிரிவு - ஆண்கள்

கிளிநொச்சி பாரதி வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, வேரவில் இந்து மகா வித்தியாலயம்.

பெண்கள

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.

19 வயது பிரிவு

ஆண்கள்

கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வத்தியாலயம், வேரவில் இந்து மகா வித்தியாலயம், முருகானந்தா மகா வித்தியாலயம்.

பெண்கள்

பரந்தன் இந்து மகா வித்தியாயலயம், பளை மத்திய கல்லூரி, முருகானந்தா மகா வித்தியாலயம்.

இப்பாடசாலைகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளதாக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் விஷ்ணு தெரிவித்தார். (12)




# விற்பனையில் சாதனை

(கொழும்பு)

ஒலிம்பிக் போட்டிக்கான ரிக்கெற் விற்பனையில் லண்டன் சாதனை படைத்துள்ளதாக லண்டன் ஒலிம்பிக் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

66 லட்சம் பார்வையாளர்களுக்கான ரிக்கெற் விற்பனை 6 வார காலம் நடைபெற்று முடிவடைந்துள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச நாடுகள் பங்குகொள்ளும் வன்மையான அடுத்த ஒலிம்பிக் போட்டி 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலயமட்ட இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இரண்டாவது நாளாக நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் யாழ்.வலயத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகள் பங்குபற்றின. 11 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்கள் பங்குபற்றும் இப்போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

இம்மெய்வல்லுநர் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்கள் அடுத்து நடைபெறவுள்ள மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் தேசிய ரீதியில் நடைபெறும் மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர்.

இப்போட்டிகள் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணி வரை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். இல் பங்கேற்கும் டில்சான் விரைவில் நாடு திரும்புகின்றார்


(கொழும்பு)

தற்போது இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள இலங்கை கிரிக்கட் அணியின் புதிய தலைவர், திலகரட்ண டில்சான், இங்கிலாந்து செல்லும் இலங்கை அணியுடன் இணைந்து கொள்ளும் நோக்கில் இலங்கை வருவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இங்கிலாந்து சுற்றுக்கான இலங்கை அணியில் கலந்து கொள்ள மிக ஆர்வமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், இந்தியாவில் இடம்பெறும் இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளில், அவர் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இங்கிலாந்து செல்லும் இலங்கை அணி, அங்கு மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், ஐந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும், ஒருருவென்ரி -20 போட்டி களிலும் பங்குகொள்ளவுள்ளது.



# உடற்பயிற்சிப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் 19 வயது மாணவர்களுக்கான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலை வீரர்களை உரிய நேரத்துக்குமுன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (11)


# படையினர் சென்ற மற்றொரு பேருந்தும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது

## பாகிஸ்தானில் இரண்டு தினங்களுக்குள் சம்பவம்

(கராச்சி)

பாகிஸ்தானில் நேற்று முன் தினம் ராணுவ பேருந்து ஒன்றை தீவிரவாதிகள் குண்டு வைதத்துத் தகர்த்தனர். இதில் 6 பேர் பலியானார்கள். இந்த நிலையில் இன்று மேலும் ஒரு ராணுவ பேருந்தை தீவிர வாதிகள் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள துறை முக நகரமான கராச்சியில் இருந்து ராணுவ அதிகாரி களை ஏற்றிக் கொண்டு பேருந்து ஒன்று சென்றது. அப்போது அந்த பேருந்தில் சக்தி வாய்ந்த குண்டு வெடித் தது. இதில் பேருந்தில் இருந்த ராணுவ அதி காரிகள் தூக்கி வீசப்பட்டனர். பேருந்தில் பய ணம் செய்த ஏராளமான வீரர் கள் பலியாகி விட்டனர்.



அவர்கள் எத் தனை பேர் என்ற விவரம் உடன டியாகத் தெரியவில்லை. 2 பேர் மட்டும் இறந்து இருப்பதாக முதல் கட்ட தக வல் தெரிவிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். 15 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந் தனர்.

அவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிடமாக உள் ளது. இந்தக் குண்டு வெடிப் பால் கராச்சி நகரில் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.

# திபெத்தின் புதிய பிரதமராக லாப்சேவ் சாங்கே தெரிவு



(தர்மசாலா)

திபெத்திய புதிய பிரதமராக லாப்சேங் சாங்கே தேர்வு செய யப்பட்டுள்ளார். கடந்த 1959 ஆம் ஆண்டு வரை திபெத் சுதந்திர நாடாக இருந்தது.

தலாய் லாமா திபெத்தை ஆண்டு வந்தார். சீனாவின் ஆக்கிரமிப்பால் தலாய் லாமா அங்கிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். இமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்ம சாலாவில் தங்கி, திபெத் சுதந் திரத்துக்காக அவர் போராடி வருகிறார்.

திபெத்தில் உள்ள மக்கள் பலர், தலாய் லாமாவை இன் னும் தங்கள் தலைவராகக் கருதுகின்றனர். உலகம் முழு வதும் உள்ள திபெத்தியர்கள் வாக்கெடுப்பு மூலம் பிரதம ரைத் தேர்வு செய்கின்றனர். ஆன்மிகப் பணியுடன் அரசி யலையும் கவனித்து வந்த தலாய்லாமா ஓய்வு பெறப் போவதாக அறிவித்தார்.

இதையடுத்து, புதிய பிரத மருக்கான தேர்தல் நடந்தது. ஹவார்டு பல்கலைக் 'கழகத் தில் சட்டப்படிப்பு படித்த லாப் சேங் சாங்கேவும் (43), அமெரிக் காவின் ஸ்டேன்போர்டு பல் கலைக்கழகத்தில் படித்த டிநாங் டென்சின்னும் போட்டி யிட்டனர்.

இதில், சாங்கேவுக்கு 49 ஆயி ரத்து 189 வாக்குகளும், [illegible] குக்கு 8 ஆயிரத்து 646 [illegible] களும் கிடைத்தன. இதை டுத்து, லாப்சேங் சாங்கே பிரத மராகத் தேர்வு செய்யப்பட்டார்.

திபெத் பிரதமரைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பை நேபாளமும், பூட்டானும் அனு மதிக்கக்கூடாது என, சீனா எச் சரித்திருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.



பிரிட்டன் இளவரசர் வில்லியம்ஸ் - கதே மிடில்டன் ஆகியோரது திருமணம் இன்று காலை 11 மணிக்கு (இலங்கை நேரப்படி மதியம் 3.30 மணி) லண்டனில் உள்ள பாரம்பரிய வெஸ்ட் மினிஸ்டர் அபே எனும் தேவாலயத்தில் விமரிசை யாக நடக்கிறது.

திருமணத்தன்று லண்டனில் விடுமுறை அறிவிக் கப்பட்டுள்ளது. இந்தத் திருமணம் தொலைக்காட்சி மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பப்படுகிறது

## வெள்ளி விருந்து

பேரின்பத்தைச் சுவையுங் கள். எல்லாப் பொருளிலும் இறைவனைப் பார்க்கின்ற பக்குவத்தை ஒருவன் பெற்று விட்டால், எல்லா அறிவுக் கருவிகளும் அந்த இறை உணர்வைத் தரும்பொழுது, அந்த இறைத் தன்மை ஒன்றையே பார்த்து, கேட்டு, சுவைத்து, முகர்ந்து, தொட்டு உணரப்படும்

# தெய்வீகம் மலரும் பொழுது

பொழுது மனிதன் ஐயமின்றி இறைவனின் வடிவத்தில் ஒரு பகுதியாகி அவனிடத்திலே அவனோடு கூடவே வாழ்கிறான்.

உங்களுடைய சொந்த வளர்ச்சிக்காகவே இந்தக் கடமையை நீங்கள் ஆற்ற முற்படும்பொழுது முதற்படியிலேயே நீங்கள் ஒரு சக்தியைப் பெறுவீர்கள்.

ஒரு புதிய தூய்மை யான மகிழ்ச்சியில் சிலிர்ப்பீர்கள். பேரின் பத்தின் முழுமையைச் சுவைப்பீர்கள். ஒரு புது மனிதத் தன்மையினால் புத்துணர்வு பெறுவீர்கள்.

- பாபா




# பிறந்த இடம் குறித்த சர்ச்சைக்கு முடிவு கட்டினார் ஜனாதிபதி ஒபாமா



(வொஷிங்டன்)

நீண்ட காலச் சர்ச்சைக்கு பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தன்னுடைய பிறந்த இடம் குறித்த தகவலைத் தெரிவித்துள்ளார். கடந்த 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி பதவிக் கான தேர்தலில் குடியரசுகட்சி சார்பில் போட்டியிட்டார்.

அப்போது இவரின் பிறப்பு மற்றும் இருப்பிடம் குறித்து சர்ச்சை எழுந்தது. இருப்பினும் தேர்தலில் அமோகமாக வெற்றி பெற்று ஜனாதிபதி பதவியில் அமர்ந்தார்.


இருப்பினும் எதிர்க்கட்சி யான ஜனநாயக கட்சியினர் ஜனாதிபதியின் பிறந்த இடம் குறித்த சந்தேகங்கள் எழுப்பி வந்தனர். இந்நிலையில் வரும் 2012 ஆம் ஆண்டு நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட முடிவு செய்துள்ள ஒபாமா தன்னுடைய பிறந்த இடம் குறித்த சான்றிதழை வெளி யிட்டார்.

அதில் ஹவாய் தீவின் ஹோனோலு நகரில் 1961 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி பிறந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் எதிர்கட்சிக ளின் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது என வெள்ளை மாளிகையின் தகவல் தொடர்பு இயக்குநர் டான் பெபியர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி மற்றும் துணை ஜனாதிபதி பதவிக ளுக்கு போட்டியிடுவோர் அமெ ரிக்க பிரஜையாக இருக்க வேண் டும் என்பது நியதியாகும்.

# தூதுவர் விலகினார்



(சென்னை)

இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திமோதி ரோமர் ராஜி னாமா செய்துள்ளார்.

வொஷிங்டனில் தமது குடும் பத்தினருடன் வசிக்கப் போவதாக திமோதி ரோமர் அறிவித்துள் ளார்.

தனது ராஜினாமாக் குறித்து முன்னதாகவே அதிபர் ஒபாமா விடம் தெரிவித்துள்ள திமோதி ரோமர், இந்திய - அமெரிக்க நல்லுறவுக்காகப் பாடுபட்டது மனநிறைவு அளிக்கிறது என்று கூறியுள்ளார்.

# அமெரிக்க புலனாய்வு அமைப்பின் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம்

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் புல னாய்வுப் பிரிவு அதிகாரிகள் பலருக்கு, திடீரென பல்வேறு இடமாற்றங்கள் வழங்கப்பட் டுள்ளன. இதன்படி அமெரிக் காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.,யின் இயக்குநராக இருந்த லியோன் பனீட்டா மாற்றப்பட்டு அவருக்குப் பதி லாக ஆப்கானிஸ்தானுக்கான ராணுவ ஜெனரலாக உள்ள டேவிட் பிட்ரா யூஸ்சை நியமித்து உத்தரவிட்டுள் ளார்.

ஜனாதிபதி ஒபாமா மேலும் ரேயான் கிராக்கர் என்பவர் ஆப்கானிஸ்தானிற்கான புதிய தூதராக நியமிக்கப்பட்டுள் ளார். இவர் இதற்கு முன்னர் பாகிஸ்தான், ஈராக், சிரியா, குவைத், லெபனான் போன்ற நாடுகளில் அமெரிக்கத் தூத ராகப் பணியாற்றியுள்ளார்.


அமெரிக்காவில் நடைபெற உள்ள தேர்தல் மற்றும் ஆப் கானில் படைகள் வாபஸ் பெறப்படுவதை முன்னிட்டே இந்தப் பணியிடமாற்றம் நடை பெற்றுள்ளதாகக் கூறப்படு கிறது.

மேலும் கிராக்கர் ஜனாதிபதி ஒபாமாவின் நம்பிக்கைக்கு உரியவராக இருப்பதாலும் ஈராக் போரில் பெற்றுத்தந்த வெற்றியை போன்றே ஆப் கானிஸ்தானிலும் வரும் நவம் பர் மாதம் நடைபெற உள்ள தேர்தலையும் அமைதியான முறையாக நடத்தித் தருவார் என்ற நம்பிக்கையில் நியமிக் கப்பட்டுள்ளார். மேலும் ஆப்கானில் உள்ள அமெரிக்க படைகளுக்கான தளபதி பதவிக்கு ஜான் ஆலென் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆலன் தற்போது புளோ ரிடா மாகாணத்தில் உள்ள மத்திய கமாண்டோப் படை பிரிவில் துணைக் கமாண்ட ராகப் பதவி வகித்து வருகிறார்.

# சாயிபாபாவின் உடலை வைப்பதற்காக 20 நாட்களுக்கு முன் வாங்கப்பட்ட பெட்டி

## விசாரணை நடத்தக் கோரிக்கை



(நகரி)

சாயிபாபா மரணம் தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. இப்போது புதிதாக சவப்பெட்டி விவகாரம் தலையெடுத்து உள்ளது. சாயிபாபா இறந்ததும் அவரது உடல நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட குளிர்சாதன (பிரீசர் பக்ஸ) சவப்பெட்டியில் வைக்கப்பட்டது.

இதுபோன்ற வடிவில் சவப்பெட்டி தயாரித்தது இதுவே முதல் முறையாகும். கோவையைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தின் பெங்களூர் கிளையில் இந்தச் சவப்பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. ராஜேந்திரநாத் ரெட்டி என்பவர் இதற்கு ஓடர் கொடுத்துள்ளார்.

சாயிபாபா இறந்ததும் 24-ந் தேதி மாலை அவரது உடல் இந்த சவப்பெட்டியில் வைக்கப்பட்டது. இதை தொலைக்காட்சி பார்த்த கோவை நிறுவனத்தின் உரிமையாளர் லட்சுமி இந்த சவப்பெட்டி தங்களது நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டது போல் இருக்கிறதே என்று சந்தேகம் அடைந்தார். இது பற்றி சவப்பெட் டிக்கு ஓடர் கொடுத்த ராஜேந்திர நாத் ரெட்டியுடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவர் சாயிபாபாவுக்காக பிரத்யேகமாக ஓடர் கொடுத்ததை ஒப்புக் கொண்டார்.

சவப்பெட்டிக்கு முன் கூட்டியே ஓடர் கொடுத்தது ஏன்? யார் இதற்கு ஆர்டர் கொடுக்க சொன்னார்கள் என்பது மர்மமாக இருக்கிறது.

சாயிபாபா மார்ச் 28 ஆம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்பு ஏப்ரல் 15 ஆம் திகதி தான் அவரது உடல் நிலை மோசம் அடைந்தது. ஆனால் ஏப்ரல் 4 ஆம் திகதியே சவப்பெட்டிக்கு ஓடர் கொடுத்தது ஏன் என்பது மர்மமாக இருப்பதாக சாயிபாபா பக்தர்கள் தெரிவித்தனர்.

96 வயது வரை உயிரோடு இருப்பேன் என்று சொன்ன பாபா உயிர் பிழைத்து வருவார் என்று நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், அவர் இறப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பே சவப்பெட்டிக்கு ஓடர் கொடுத்தது மர்மமாக இருப்பதாகப் பக்தர்கள் கூறினார்கள்.

சாயிபாபா மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று பெங்களூர் காயத்ரி நகர் காளிகா ஆசிரம பீடாதிபதி யோகேஸ்வர ருசி குமாரசாமி கூறியுள்ளார்.

# நடிகர் கார்த்தி திருமணம்



(சென்னை)

பருத்திவீரன், பையா, ஆயிரத்தில் ஒருவன், நான் மகான் அல்ல படங்களில் நடித்து முன்னணி இடத்தில் இருக்கும் நடிகர் கார்த்தியின் திருமணம் முடிவாகியுள்ளது.

ஈரோட்டைச்சேர்ந்த பெண்ணை கரம் பிடிக்கிறார்.

இது குறித்து கார்த்தியின் தந்தை சிவகுமார் கூறுகையில் - ஈரோட் டைச்சேர்ந்த ரஞ்சனியை கார்த்தி திருமணம் செய்கிறார்.

மணப்பெண் ரஞ்சனி எம். ஏ. ஆங்கில இலக்கியத்தில் தங்கப்பதக்கம் பெற்றவர். ஜூலை 3 ஆம் திகதி கார்த்தி -ரஞ்சனி திருமணம் நடைபெறுகிறது என்று அறிவித்துள்ளார்.

# வாக்கு எண்ணும் நிலையத்தை நள்ளிரவில் ஆய்வு செய்த அதிகாரி



(சென்னை)

தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணும் மையங்கள் பலத்த பாதுகாப்புடன் கண்காணிக்கப் பட்டு வருவதாக, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி பிரவீண் குமார் கூறியுள்ளார். கரூர் வாக்கு எண்ணும் மையத்தை நள்ளிரவில் ஆய்வு செய்த அவர், வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்தி அளிப்பதாக கூறினார். தமிழக தலைமை தேர்தல் அதிகாரி பிரவீண் குமார், கரூரில் வாக்கு எண்ணும் மையத்தை திடீரென நள்ளிரவில் ஆய்வு செய்தார்.


மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளை பார்வையிட்ட அவர், கண் காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள கட்சி பிரதிநிதிகள் தங்கியுள்ள இடங்களையும் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணும் மையங்கள் பலத்த பாதுகாப்புடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்றார்.

இந்த ஆய்வின்போது துணைத் தேர்தல் அதிகாரி அமுதா, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




# இயக்குநர் ராம்கோபால் வர்மா உதவியுடன் திரைப்படமாகவுள்ளது வீரப்பனின் கதை



(சென்னை)

தமிழக கர்நாடக மலைப் பகுதியில் 30 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த வீரப்பன் சில வருடங்களுக்கு முன்பு தமிழக அதிரடிப் படையால் சுடடுக் கொல்லப்பட்டார்.

வீரப்பன் மீது 100 இற்கும் மேற்பட்ட கொலை வழக்குகளும், சந்தனக் கட்டை கடத்தல், ஆயுதக் கடத்தல் வழக்குகள் உள்ளன. பொலிசுக்கு சிம்ம சொப்பனமாக இருந்த வீரப்பன் பற்றி சினிமாப் படம் எடுக்க பலர் முன்வந்தனர்.


இது பற்றிய அறிவிப்பையும் வெளியிட்டனர். ஆனால் வீரப்பன் மனைவி முத்துலட்சுமி தனது அனுமதி இல்லாமல் வீரப்பன் சினிமா எடுக்கக் கூடாது என்று நீதிமன்றில் தடை வாங்கி விட்டார். தற்போது வீரப்பன் பற்றிய சினிமாவை முத்துலட்சுமியே எடுக்கவுள்ளார். இதற்காக அவர் பிரபல டைரக்டர் ராம்கோபால் வர்மாவை அணுகத் திட்டமிட்டுள்ளார்.

கர்நாடக சிறையில் 2 வருடங்கள் அடைக்கப்பட்டு இருந்த முத்துலட்சுமி நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார். அவர் சென்னை திரும்பியதும் இதற்கான நடவடிக்கையில் இறங்குவார் என்று கூறப்படுகிறது. வீரப்பனின் மகள்கள் வித்யா ராணி, பிரபா ஆகியோர் சென்னையில் தங்கி படித்து வருகிறார்கள். மகள்களுடன் தங்கியிருக்க முத்துலட்சுமி முடிவு செய்துள்ளார்.

மூத்த மகள் வித்யாராணி பி.ஏ., படிக்கிறார். 2 ஆவது மகள் பிரபா என்ஜினீயரிங் படிக கிறாா. அவர்களை நன்கு படிகக வைத்து அமைதியான வாழ்க்கை வாழத் திட்டமிட்டு இருக்கிறார்.

மேலும் முத்துலட்சுமி தனது வாழ்க்கை வரலாறு பற்றி புத்தகம் எழுதவும் திட்டமிட்டுள்ளார். 6 வருடங்களாக அதிரடிப்படையின் காவலில் இருந்து சித்ரவதை அனுபவித்தது, அதிரடிப்படையின் அத்துமீறல்கள் பற்றி அதில் எழுதுகிறார். தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் இந்தப் புத்தகம் வெளியிடப்படவுள்ளது.

# ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக 2 நிறுவனங்களின் சொத்து முடக்கம்



(புதுடெல்லி)

ஸ்பெக்ட்ரம் .முறைகேடு தொடர்பாக உயர் நீதி மன்றின் வழிகாட்டுதல்படி சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். விசாரணையில் முன்னேற்றங்கள் குறித்த விவரங்களை அவ்வப் போது இரு தரப்பினரும் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்து வருகின்றன.

அமுலாக்கப்பிரிவு நடத்திய விசாரணைகள் குறித்த அறிக்கையை நேற்று உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அமுலாக்கப்பிரிவு வக்கீல் வேணுகோபால் இந்த அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

அப்போது, நீதிபதிகளிடம் கூறிய வேணுகோபால் ஸ்பெகட்ரம் முறைகேட்டில் ஈடுபட்ட 2 செல்போன் நிறுவனங்கள் பண பரிவர்த்தனை மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றம் செய்து உள்ளன. எனவே, இந்த நிறுவனங் கள் தலா ரூபா 2 ஆயிரம் கோடிக்கு மேலான சொத் துக்களை முடக்க உள்ளோம் என்று கூறினார். ஆனால் அவை எந்த நிறுவனங்கள் என்ற விவரத்தை அவர் தெரிவிக்கவில்லை.

இதுபற்றி அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள் வட்டாரத்தில் விசாரித்த போது அந்த இரு நிறுவனங்கள் பெயரைத் தெரிவித்தனர்.

யுனினார் என்ற செல்போன் நிறுவனத்தை நடத்தி வரும் யுனிடெக் வயர்லெஸ் , ஷாகித் பல்வாவின் சுவான் டெலிகாம் ஆகியவைதான் இந்த நிறுவனங்கள் என்பது தெரிய வந்தது.

இதில் யுனிடெக் நிறுவனம் ரூ.138 கோடி மட்டும் முதலீடு செய்து ரூ.2,480 கோடி சம்பாதித்து இருப் பதை அமுலாக்கப்பிரிவு கண்டு பிடித்தது.

இந்த நிறுவனத்தின் ரூ.2,340 கோடி சொத்துக்களை அமுலாக்கப் பிரிவு முடக்க முடிவு செய்துள்ளது.

இதே போல சுவான் நிறுவனத்திடம் இருந்து ரூ.2818 கோடி சொத்துக்கள் முடக்கப்படுகின்றன. இரு நிறுவனங்களிலும் சேர்த்து மொத்தம் ரூ.5,158 கோடி சொத்துக்கள் முடக்கம் செய்யப்படுகின்றன.

# பெரும் போகத்தில் அழிவடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கல்

(கொழும்பு)

கடந்த பெரும்போகத்தின் போது அழிவடைந்த பயிர்களுக்காக சுமார் 400 மில்லியன் ரூபாவை செய்கையாளர்களுக்கு இழப்பீடாக வழங்கத் திட்டமிட்டுள்ளதாக விவசாயத் தொழில்நுட்பம மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக இம்முறை சிறுபோக நடவடிக்கைகளின் போதிலும் தத்தமது செய்கைகளை காப்புறுதி செய்ய செய்கையாளர்கள் கூடுதல் கவனம் செலுத்துவார்கள் என்று அந்த சபையின் தலைவரான சட்டத்தரணி சுமனா ஆரியதாச குறிப்பிட்டார்.

இதனை முன்னிட்டு சிறுபோக பயிர்ச் செய்கைகளை காப்புறுதி செய்யும் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமக்கு ஏற்பட்ட செய்கை பாதிப்புக்களுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை விவசாயிகள் நன்கு உணர்ந்துள்ளதாக சட்டத்தரணி சுமனா ஆரியதாச தெரிவித்தார்.

தற்போது வழங்கத் தீர்மானித்துள்ள 400 மில்லியன் ரூபாவுக்கான இழப்பீடுகள் குறித்தும் சிறுபோக காப்புறுதி தொடர்பாகவும் சபையுடன் தொடர்பு கொண்டு செய்கையாளர்கள் தகவலைப் பெற்று வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலைச் சிறையிலிருந்து நான்கு கைதிகள் தப்பினர்

(கொழும்பு)

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் சிறைச்சாலையை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் கடந்த 26ஆம் திகதி தப்பிச் சென்றுள்ளதாக திருகோணமலை துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கப்பம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவரும், கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறி கைது செய்யப்பட்டிருந்த ஒருவருமே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் ஒருவர் வாழைச்சேனையைச் சேர்ந்தவர எனவும், ஏனையோர் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்ற குறித்த கைதிகளை கைது செய்ய திருகோணமலை பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக திருகோணமலை துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பயணம் செய்வதில் சிரமம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் குமாரசுவாமி பெண்கள் விடுதிக்கு முன்பாக உள்ள பிரதானவீதி கடுமையாகச் சேதமடைந்து தற்போது பெய்துவரும் மழைநீர் தேங்கி நிற்பதனால் பல்வேறு தரப்பினரும் பயணம் செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

குறித்த வீதியில் ஆரம்பத்தில் காணப்பட்ட சிறிய குழிகள் நாளடைவில் பெரிதாகி பாரிய குழிகளாக மாறியுள்ளன. இதனால் இப்பகுதியால் பயணம் மேற்கொள்பவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் பயணிப்பவர்கள் சேறு படிந்த உடைகளுடனேயே செல்ல வேண்டியுள்ளது.

பல்கலைக்கழகம்,தொழில்நுட்ப கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம் போன்றவற்றில் கற்கும் மாணவர்கள் பலர் இந்த வீதி ஊடாகவே சிரமத்தின் மத்தியில் சென்றுவருகின்றனர்.

எனவே இந்த வீதியில் உள்ள குழிகளைச் சீர்செய்ய சம்பந்தபட்டவர்கள் முன்வரவேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கா)

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அரசு பதிலளிக்க வேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ண

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமேன சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.**



அறிக்கை தொடர்பில் உணர்ச்சிவசப்படுவதனை விடவும் உரிய பதிலளிப்பது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது பக்க நியாயங்களை எடுத்துரைப்பதற்கு இலங்கைக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை எனவும், சர்வதேச ஊடகங்கள், மனித உரிமை அமைப்புக்கள் போன்றவற்றிடமிருந்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களிடமிருந்து அதிகளவு தகவல்கள் திரட்டப்பட்டுள்ளது.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மில்லியனுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள போதிலும், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு இந்த விடயங்கள் பற்றி ஆலோசனை வழங்க நிபுணர் குழு நியமிக்கப்படவில்லை.

நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயற்திறன் இன்மையை உணர்த்தி நிற்கிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு காத்திரமாக செயற்பட்டிருந்தால் நிபுணர் குழு அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதனைத் தடுத்திருக்கலாம்.

இறுதிக் கட்ட யுத்தம் மற்றும் யுத்தத்தின் பின்னரான நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் சரியான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும எனவும் அவர் தெரிவித்தார்.

# மதுபான, சிகரட் விலை அதிகரிப்பு

## 17ஆயிரம் கோடிரூபா வருமானம்

(கொழும்பு)

மதுபானம் மற்றும் சிகரட் என்பன மீதான விலைகள் அதிகரிக்கப்பட்டதாலும் வரி விதிக்கப்பட்டதன் மூலமும் கடந்த 10 வருட காலத்தில் 17.074 கோடி ரூபா வருமானம் பெறப்பட்டதாக அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.வாய்மூல விடைக்காக ரவி கருணாநாயக்க எம்.பி.எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது 2000 ஆம் ஆண்டில் 247 ரூபாவாக இருந்த வெளிநாட்டு மதுபான விலை 2011ல் 1003 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2003ல் 190 ரூபாவாக இருந்த வைன் 718 ரூபாவாகவும் 2000 ஆம் ஆண்டில் 213 ரூபாவாக இருந்த தென்னை மற்றும் பதப்படுத்திய மதுபானம் 213 ரூபாவில் இருந்து 863 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் 4.82 ரூபாவாக இருந்த 84 மி.மீ.க்கு அதிகமான சிகரெட் 2010 டிசம்பர் ஆகும் போது 15 ரூபாவாக உயர்த்தப்பட்டது. 84 மி.மீ. ரக சிகரெட் 4.30 ரூபாவில் இருந்து 12.10 ரூபாவாக உயர்த்தப்பட்டது.கடந்த 10 வருட காலத்தில் மதுவரி மூலம் 162108.90 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது. சிகரெட் விலை அதிகரிப்பின் மூலமாக 9.635 மில்லியன் வருமானம் கிடைத்தது.

சிகரெட் மீது 12 வீத பெறுமதி சேர் வரியும் 2 வீத சேதக் கட்டுமான வரியும் பெறப்படுவதோடு ஒரு கிராம் புகையிலைக்கு 10 ரூபா வரி அறவிடப்படுகிறது.உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒரு லீற்றர் மதுபானத்திற்கு 12 வீத பெறுமதி சேர் வரியும் 2 வீத தேசக்கட்டுமான வரியும் ஒரு வீத பொருளாதார சேவைக் கட்டணமும் அறவிடப்படுகிறது.

# ஆணைக்குழுவின் முதற்கட்டப் பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன

## ஆலோசகர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தகவல்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முதற்கட்ட விசாரணை அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் ஆலோசகர் லக்ஷமன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை மிக விரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கை தொடர்பாக அரசிடமிருந்து வரவேற்கத்தக்க பதில் கிடைக்கப் பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மால் வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் ஆலோசனை ஒன்றின் படி, "கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யத் தேவை இல்லாவிட்டால், அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சட்டமா அதிபர் விசேட கவனம் செலுத்த வேண்டும்". இதனை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அதியுயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைத்து, அந்த இடங்களை மீண்டும் கையளிக்குமாறு தம்மால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அரசாங்கத்தினால் பதில் கிடைக்கப் பெற்றதாக ஆணைக்குழுவின் ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாணத்தின் பல அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள காணிகள் உரிய முறையில் அரசாங்கத்தின் பாதுகாப்பிலிருந்து கைவிடப்பட்டதாகவும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆலோசகர் லக்ஷமன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# புதிய ஆண்டுக்கான கல்விச்செயற்பாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் புதிய ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகளை ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களின் வருடாந்த கல்வி நடவடிக்கைகள் தனித்தனியே ஆரம்பிக்கப்படுகின்றமை பாரிய பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களினதும் கல்வி நடவடிக்கைகள் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஊடாக தெரிவு செய்யப்படுகின்ற அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ள முடியும்.

பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் அதிகரிக்கவும் எண்ணியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் 'பாதுகாப்பு கரங்கள்' திட்டத்தின் கீழ் சிறுவர் சிகிச்சைப் பிரிவு திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவு சுமார் ஏழு மில்லியன் ரூபா செலவில் பெயார்ஸ் "பாதுகாப்பான கரங்கள்" திட்டத்தின் மூலம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பூராகவும் பெயார்ஸ் பாதுகாப்புக் கரங்கள் திட்டத்தின் கீழ் 17 ஆவது திட்டமாக யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு மேலதிகமாக டயறியா வாட், பொதுப் பிரதேசம் மற்றும் சிறுவர்களின் விளையாட்டுப் பகுதியும் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்நிகழ்விற்கு வந்திருந்த பெயார்ஸ் பேபி சோப் நிறுவன அதிகாரிகள் மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் வரவேற்கப்பட்டு நிகழ்விடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானி பசுபதி ராஜா, யாழ்.போதனா வைத்திய சாலை குழந்தை வைத்திய நிபுணர் எஸ்.கே.அருள்மொழி, பெயார்ஸ் பேபி சோப் நிறுவன விற்பனை முகாமையாளர் ஆகியோர் இணைந்து இச்சிகிச்சைப் பிரிவை வைபவரீதியாகத் திறந்து வைத்தனர்.

அத்துடன், பிரதம விருந்தினர் கள் சிறுவர் பகுதியின் பல பிரிவுகளையும் பார்வையிட்டுள்ளதுடன், சிறுவர்களுக்கான பரிசில் பொருட்களையும் வழங்கினர்.

## வத்திராயன் காணிப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

வத்திராயன் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட காணிகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஆராயும் கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2005ஆம் ஆண்டு வத்திராயன் கிராமத்திலுள்ள அரச காணிகள் அளவீடு செய்யப்பட்டு அப்பிரதேசத்திலுள்ள மக்களில் ஒரு குடும்பத்திற்கு 2 பரப்பு வீதம் வழங்கப்பட்டது.

இதில், சில தனியார் காணிகள் இருப்பதாக அவர்களால் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் இப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுடனும், அக்கிராமத்தில் வாழும் மக்களுடனும் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலில், இக்கிராமத்தில் வாழும் குடும்பங்களின் தலைவன், தலைவி மற்றும் காணி உரிமையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வத்திராயன் கிராம அலுவலர் விமலேந்திரன் அறிவித்துள்ளார். (38)

## ரயிலில் பயணச்சீட்டு இன்றி பயணிப்போர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

ரயிலில் பயணச்சீட்டின்றி பயணம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அலுவலக ரயில் பிரதேச மற்றும் நகர்சேர் கடுகதி ரயில்கள் மற்றும் தூரசேவை ரயில்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களம் இழந்துள்ள வருமானத்தை மீளப் பெற்றுக்கொள்வதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்றும்,

இதற்கென பயணச்சீட்டு பரிசோதகர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் 3 ஆயிரம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் வரும் யாழ்.அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைச் செயற்படுத்தும் நடவடிக்கைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் அடிப்படையில் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்பிரகாரம் இங்கு வெகு விரைவில் கைத்தொழில்துறை சார்ந்த செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தயாராகி வருகின்றனர். இக்கைத்தொழில் பேட்டை மீளச் செயற்படுத்தும் நிலையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

தொழில் வாய்ப்புக்களுக்கான விண்ணப்பங்கள் வெகு விரைவில் கோரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 15 ஆயிரம் மில்லியனில் கிராம அபிவிருத்தி

(கொழும்பு)


மகிந்த சிந்தனைக்கு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமங்களை இணைக்கும் வகையில் 15000 மில்லியன் ரூபா செலவில் 210 பாலங்களை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இது தொடர்பாக முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்துக்கு ஹொங்கொங் ஷங்ஹாய் வங்கி 35 மில்லியன் பவுணை கடனுதவியாக வழங்குவதுடன், ஏனைய தொகையான 9647 மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிட உள்ளது.

இதேவேளை கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதுவரை 9400 கிலோ மீட்டர் தூரம் கொண்ட கிராமங்கள் ஊடான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை மே மாதம் 10ஆம் திகதி முதல் ஆரம்பம்



(கொழும்பு)

கொழும்புக்கும் இந்தியாவின் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை எதிர்வரும் மே 10ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சு நேற்று தெரிவித்தது.

இந்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த குறித்த கப்பல் சேவை, தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்தியாவிலிருந்து முதலாவது கப்பல் எப்போது இலங்கையை வந்தடையும் என்பது இதுவரை முடிவுசெய்யப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மே இரண்டாம் திகதி முதல், குறித்த சேவை விளம்பரப்படுத்தப்பட்ட பின்னர் அதிக கேள்வி வரும் என எதிர்பார்ப்பதாகவும், இந்தியாவில் பலர் ஏற்கனவே முன்பதிவு செய்திருப்பதாகவும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அனைவரது எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் முப்பது வருடங்களுக்கு பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கப்பல் சேவை ஊடாக இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் சிறு முயற்சியாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியன ஊக்குவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சேவை வாரத்தில் மூன்று நாட்கள் இடம்பெறவுள்ளதுடன், இந்தியா மூன்று கப்பல்களையும், இலங்கை இரண்டு கப்பல்களையும் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த சேவையில் ஈடுபடவுள்ள கப்பல்களில் நீச்சல் தடாகம், உணவறைகள், நூலகம் போன்ற பல வசதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச உயர்மட்ட பிரதிநிதிகளுடன்....

பிரச்சினைகள் குறித்து அரச தரப்போடு பேசி வருவதாகவும் அவ்வாறு பேசியே பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். ஆயினும், இன்று நடக்கும் அரச தரப்புடனான பேச்சு வார்த்தை என்பது எமது கட்சியின் உயர் மட்டக் குழு வினருக்கும், அரச தரப்பு உயர் மட்டக்குழுவினருக்கும் இடையில் நடைபெறுகின்ற விஷேட பேச்சுவார்த்தையாகும்.

இதில் தமிழ் மக்கள் முகம் கொடுத்து வரும் சமகால பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காண்பது குறித்தும், நீண்ட காலமாக தீராப்பிரச்சினையாக நீண்டு செல்லும் எமது மக்களுக்கான அரசியலுரிமை பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்தும் விரிவாகவும், ஆரோக்கியமான வழிமுறையிலும் பேசப்படும் எனத் தெரிவித்திருக்கும் ஈழ மக் கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் அ.இராஜமாணிக்கம், நல்லிணக்க உணர்வோடு எமது மக்களின் பிரச்சினைகளுக்கு அரசுடன் சுமுக மாக பேசித் தீர்வு காண்பதே ஆரோக்கியமான வழிமுறை என்றும், இதன் மூலமே எமது மக்கள் முகம் கொடுத்து வரும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஆதாரமற்ற சவாலை...

மறைவு எதுவுமே கிடையாது. சபையின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே எனது நடவடிக்கைகள் இடம்பெறுகிறது.

ஆதாரமில்லாமல் மேற்படி உறுப்பினரால் விடுக்கப்பட்ட சவாலை ஏற்றுக்கொள்கிறேன். அவர் குறிப்பிடும் இடத்தில், குறிப்பிடும் நேரத்தில் சவாலை எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன் என நேற்றுக் காலை நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்

ஆதாரமற்ற செய்தியை வெளியிட்டு அரசியல் இலாபம் தேட முயற்சிக்கும் மேற்படி உறுப்பினரது சவாலைச் சந்திக்கத் தயாராக உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். யாழ்.மாநகர சபையின் நான்காவது மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள் தலைமையில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் ஏற்கனவே நடைபெற்ற கடந்த மாதத்திற்கான சுகாதாரக் குழு, மராமரத்துக் குழு, நிதிக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

## பால்மா விலை...

உலக சந்தையில் பால்மா வின் விலை அதிகரிக்கப்பட்டபோதிலும், எம்மால் இங்கு பால்மாவின் விலையை அதிகரிக்க முடியவில்லை. இதனால் இனியும் பால்மா வகைகளை இறக்குமதி செய்ய முடியாதுள்ளது என பால்மா உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பால்மா வகைகளின் விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அதிகாரசபை அனுமதியளிக்காதுவிடின் பால்மாக்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென்று எதிர்பார்க்கப்ப டுவதாக பால்மா உற்பத்தி நிறுவனங்கள் கூறியுள்ளன.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்...

ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இத்னை அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் யுத்தம் நிலவி வந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகள் தரப்பினருக்கு முழுமையான ஆதரவு வழங்கி வந்ததோடு மட்டுமன்றிப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாகவும் ஏற்றுக்கொண்டிருந்தனர். இறுதி யுத்தத்தில் புலிகள் அமைப்பினரைப் பாதுகாப்பதற்காக இவர்கள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே ஏகப்பிரதிநிதிகள் என்றும், அரசு தங்களுடன் மட்டுமே தமிழர்களின் அரசியல் விடயம் தொடர்பாகப் பேச வேண்டும் என்று கூறியிருக்கும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

அண்மையில் நடைபெற்ற தேர்தல் மற்றும் சம்பவங்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் கூட்டமைப்பினர் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தம்மை தெரிவித்துக் கொள்ளும் கருத்து தவறானது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்ற போது ஊடக வியலாளர் எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், அண்மைக் காலத்தில் பி.பி.சி செய்திச் சேவைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரொருவர் தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனத் தெரிவித்ததாக அவர் சுட்டிக்காட்டினார். ஆனால், அண்மையில் இடம்பெற்ற தேர்தல் மற்றும் பல்வேறு சம்பவங்களின் ஊடாக தமிழ் மக்களின் ஏகப்பிர திநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அல்ல என்பதையும் தாம் நிரூபித்துக் காட்டியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்தோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னைய காலகட்டத்தில் இருந்தே புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்ததாகவும், அந்த வலயத்தில் இருந்து அவர்களை மீட்டெடுக்க முயற்சித்ததாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில், ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆதரவு தெரிவித்தமை குறித்து தாம் கவலை அடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையால் பாதிக்கப்படப்போவது வட, கிழக்கு தமிழ் மக்களே

## அமைச்சர் விமல் வீரவன்ச



(கொழும்பு)

இலங்கையில் தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்வதை ஐ.நா.சபை விரும்பவில்லை. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையால் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களே அதிகம் பாதிக்கப்படுவார்கள் என முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார். மேற்குலக அதிபலம் வாய்ந்த நாடுகளால் செய்ய முடியாத தீய செயல்களை செய்யமுடியும் என்பதை ஐ.நா. சபை நிரூபித்துள்ளது. மாற்று ஐ.நா.சபை தேவை என்ற சர்வதேசத்தின் நிலைப்பாட்டை மாற்றியமைப்பதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தண்டனை வழங்க தனக்கு அதிகாரம் இல்லை என அப்பாவியாக தெரிவித்துவிட்டு பான் கீ மூன், நவநீதம்பிள்ளையை முன்னிறுத்தியுள்ளார். நிபுணர் குழு அறிக்கைக்கு அப்பால் சென்று குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவுள்ளதாக நவநீதம்பிள்ளை கூறுகிறார். நாடு என்ற அடிப்படையில் கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அபிவிருத்தி அடைந்துவரும், சமாதனத்தை வென்ற, ஒன்றுமையை கடைபிடிக்கும் நாட்டின் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் வடக்கு கிழக்கு தமிழர்களே அதிகம் பாதிக்கப்படுவர்.

தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ்வதை சர்வதேச சக்திகள் விரும்பவில்லை. இலங்கை அரசின் பங்காளர்களாக தமிழ் மக்கள் இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. அதனால் இந்தியாவுடன் உள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்தி நடுநிலையான நாடுகளுடன உறவுகளைப் பேணி இலங்கைக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுக்களின் பொய்த்தன்மையை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டியது அவசியம் என்றார்.

# சமூகப்பொறுப்புடன் ஊடகங்கள் செயலாற்ற வேண்டும்

## கூட்டமைப்பு மாநகரசபை உறுப்பினர் றெமிடியஸ்



(யாழ்ப்பாணம்)

பத்திரிகைகள் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டியது பத்திரிகைகளின் கடமை என நேற்று யாழ். மாநகரசபையின் மாதந்த கூடடத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாநகரசபை உறுப்பினர் முடியப்பு ரெமிடியஸ் தெரிவித்தார்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பத்திரிகை முக்கிய பங்கு வகிக்கிறது. அதனைப் புரிந்து கொண்டு பத்திரிகைகள் சரியான தகவல்களை வழங்க வேண்டும்.

குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று எம் மீது அபாண்டமான சில குற்றச்சாட்டுகளை சுமத்திஉள்ளது. அது பற்றி எம்முடன்கேட்டு உண்மை தன்மையான தகவல் வெளியிட்டிருக்கலாம் அதுவே நாகரிகம். தவறான தகவல்களை வழங்கியிருக்கக்கூடாது. இங்கு நடைபெறும் அமர்வுகளை வந்து பார்த்து ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால் சம்பந்தப்பட்டவரிடம் கேட்டு தெரிந்து கொண்டு, சரியான தகவலை மக்களுக்கு வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (கா)

# பிரதேச செயலரைத் தாக்கியவர் அடையாளம் காணப்பட்டார்

(மன்னார்)

கடந்த புதுவருட தினத்தன்று மன்னார் மாவட்டச் செயலகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வின்போது தாக்குதலுக்கு இலக்கான மன்னார் பிரதேச செயலர் ஸ்ரான்லி டி மெல்லைத் தாக்கிய சந்தேக நபர் ஒருவரைப் பிரதேச செயலர் அடையாள அணிவகுப்பின் போது அடையாளம் காட்டியுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட நீதிபதி கே.ஜீவ ராணி நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பொலிசா ரினால் கைதுசெய்து ஆஜர் படுத்தப்பட்ட ஏழு சந்தேக நபர்களும் அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டனர்:

இதன்போதே சந்தேகநபர் ஒருவர் பிரதேச செயலளரால் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் அடுத்தமாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய ஆறு பேரும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிரதேச செயலர தாக்கப்பட்டமைக்குக் காரணமான வன்முறையாளர் குழு உடனடியாகக் கைதுசெய்யப்படாமை குறித்துப் பொது மக்களாலும் நாடாளுமன்ற உறுப்பினரகளாலும் பலத்த கண்டனங்கள் வெளியிட்டதைத் தொடர்ந்து பொலிசாரினால் சந்தேகத்தின்பேரில் இவர்களது கைது இடம்பெற்றது.

## லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை

லங்கா ஈ நியுஸ் இணையதளத்தை இலங்கையினுள் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு பூகொட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் ஊடகவியலாளர் சாந்த விஜய சூரியவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுதத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான அரவிந்த பெரேரா இந்த உத்தர வைப்பிறப்பித்தார்.

## வன்னி மக்களின்......

பொதுமக்களை மனிதக கேடயங்களாக புலிகள் பயன்படுத்திய பிரதேசத்தில் நானும் அன்று சிறைப்பட்டிருந்தேன். அதன் காரணமாக பொதுமக்கள் பட்ட துன்பங்கள் மற்றும் யுத்தத்தின் பயங்கர அனுபவங்கள் குறித்து எனக்கு நன்றாகத் தெரியும்.

புலிகளின் ஆயுததாரிகள் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஈவிரக்கமின்றி பொதுமக்களைப் பெருந்தொகையில் படுகொலை செய்திருந்தனர். ஆனால் அவை பற்றியெல்லாம் ஐ.நா குழுவினர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டவில்லை. அந்த வகையில் இந்தக் குழுவினரின் அறிக்கையானது மூன்றாம், நான்காம் தரப்பினரின் கருத்துக்களை மட்டுமே உள்ளடக்கியிருக்கும் அறிக்கையே தவிர, சம்பவத்துடன் நேரடித் தொடர்புடைய எவருடைய சாட்சியமும் அதில் உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர் தனது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

## நிபுணர் குழுவின்.....

கூறப்படுவதைப்போல், வெகுஜன ஆர்ப்பாட்டங்களையும் கிளர்ச்சிகளையும் நடத்தும் உத்தேசம் அரசாங்கத்திடம் இல்லை.

நாம் குழப்பங்களையோ வன்முறைகளையோ ஐ.நா. சமூகத்துக்கு அல்லது ஏனைய வெளிநாட்டு தூதரகங்களுக்கு அசௌகரியங்களையோ ஏற்படுத்தவில்லை. அந்த குற்றச்சாட்டுகள் தற்போதைய உணர்வு பூர்வமான சூழ்நிலை யில் இந்நாட்டின் புகழை மங்கச்செய்யும் அரசியல் நிகழ்ச்சி நிரல் கொண்டவர்களினால் சுமத் தப்படுவதாகும் என வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியதாக அந்த அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை நீர் விநியோகத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன் வைத்த ஆலோசனைக்கு அமைவாக பருத்தித்துறைக்கு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 1.5 மில்லியன் டொலரை வழங்க உள்ளது. அதற்கான உடன்படிக்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கி விரைவில் கைச்சாத்திடப்பட உள்ளது.

இதன் மூலம் பருத்தித்துறையைச் சார்ந்த சுமார் 22 ஆயிரம் பொது மக்களுக்குரிய குடிநீர் பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஆனையிறவு உப்பளத்தில் 2000 பேருக்கு வேலைவாய்ப்பு

ஆனையிறவு உப்பளங்களின உற்பத்திச் செயற்பாடுகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி உப்பளங்களின் உற்பத்திகள் கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாகச் செயற்பாடுகளை இழந்துள்ள நிலையில், தற்போது இப்பகுதிகளில் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அத்துடன், மேற்படி உப்பளங்களுக்கான தலைமை அலுவலகத்தை ஆனையிறவில் அமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனையிறவு உப்பளங்களின் மூலம் முழுநேர மற்றும் பருவகால பணியாளர்களுக்கான நியமனங்கள் அனைத்துப் பணிகளுக்குமென 1800 இற்கும் 2000 இற்கும் இடைப்பட்ட நிலையில் வழங்கப்பட உள்ளதுடன், இப்பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் வசித்துவருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை வெகு விரைவில் ஏற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மிருசுவில் படுகொலை....

இருந்தனர். இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. இதனையடுத்து கொலைகள் நடைபெற்ற இடம், கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்டிருந்த இடம், அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட பருத்தித்துறை நீதிமன்ற வளாகம் ஆகியவற்றை இந்த நீதிபதிகள் மூன்று பேரும் நேற்று பார்வையிட்டு விபரங்களை பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கின் ஆரம்ப விசாரணைகளை நடத்திய அப்போதைய சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர், சந்தேக நபர்கள் மீதான அடையாள அணிவகுப்பை நடத்திய அப்போதைய பதில் நீதிவான் சுப்பிரமணியம் கந்தசாமி, இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் தரப்பில் ஆரம்ப விசாரணைகளை நடத்திய பொலிஸ் பொறுப்பதிகாரி சமரக்கோன் பண்டார ஆகியோர் நீதிபதிகள் குழுவினருக்கு சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை அடையாளம் காட்டினர். அப்போது சாவகச்சேரியின் தற்போதைய நீதிவான் எம்.கணேசராசா அவர்களும் அங்கு பிரசன்ன மாக இருந்தார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளான ஐந்து இராணுவத்தினர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட இடத்தையும் பார்வையிட்ட நீதிபதிகள் குழுவினர், இந்த வழக்கின் ஆரம்ப நீதிமன்ற விசாரணைகளை நடத்திய அப்போதைய சாவகச்சேரி நீதிவான் அன்னலிங்கம் பிரேம் சங்கரின் சாட்சியத்தையும் பதிவு செய்திருக்கின்றனர். நீதிபதிகள் குழுவினருடன் இந்த வழக்கின் பிரதிவாதிகளான ஐந்து இராணுவத்தினரும் மிருசுவில் பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர்.


# மரண அறிவித்தல்



திருமதி செல்வராசா சொர்ணம்மா

கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், செம்மணி வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்வராசா சொர்ணம்மா அவர்கள் (28.04.2011) நேற்று வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா – சின்னாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும், பிறேமா, ஜீவரதி, ரமேஷ், காலஞ்சென்ற ஜேம்ஸ், சுரேஸ் மற்றும் அனுசியா, டினேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இருதயராசா, புஸ்பராணி, திரேசம்மா, காலஞ்சென்ற யேசுராசா, செல்வராணி, மங்கலம்மா, பேரின்பராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குழந்தைவேலு, ஆனந்தசற்குணம், சுமித்திரா, ஜெயராசா, புஸ்பராணி, நிரோஷினி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.04.2011) இன்று மு.ப. 11 மணியளவில் பாண்டியன்தாழ்வு சந்தன மாதா கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்மணி வீதி,
அரியாலை.
தொ.பே.இல :- 0773142515 (118)

தகவல்:
சிவராசா மற்றும் கிறிஸ்தவம்
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**இப்பாடலைப் படித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | |
|---|---|---|
| இடம் வரும்போது உள்ளம் | ஓடும் உதிரம் - வடிந்து | நன்மை செய்பவரே உலகம் |
| இரங்கிடும் போது | ஒழுகும் கண்ணீரில் | நாடும் மேற்குலத்தார் |
| உடன் பிறந்தவர்போல் - மாந்தர் | தேடிப்பார்த்தாலும் - சாதி | தின்மை செய்பவரே - அண்டித் |
| உறவு கொள்வர் அப்பா | தெரிவதுண்டோ அப்பா? | தீண்ட ஒண்ணாதார் |

01. "மாந்தர்" என்பதனாற் கருதப்படுவது யாது? ..........
02. "இடர்" என்பதற்கு ஒத்தகருத்துச் சொல் ஒன்று எழுதுக. ..........
03. "நன்மை" என்பதற்கு எதிர்ச்சொல் ஒன்று எழுதுக. ..........
04. "அப்பா" என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக. ..........
05. "உள்ளம்" இச்சொல்லை பன்மையாக்கி எழுதுக. ..........
06. உயர்திணை, படர்க்கை, ஒருமைப் பெயர்சொல் எழுதுக. ..........
07. "உதிரம்" என்பதாற் கருதப்படுவது யாது? ..........
08. இப்பாடலில் தேடிப்பார்த்தாலும் தெரியாதது எது? ..........
09. உயர்திணை வினைச் சொல்லைத் தெரிந்து எழுதுக. ..........
10. கண்ணில் வடிவது கண்ணீர்போல மனித உடலில் ஓடுவது? ..........

**கடந்த ஞாயிறு அன்று சந்தைக்குச் சென்ற இராமலிங்கமும் அவர் மனைவியும் இரு வேறு கடைகளுக்குச் சென்றனர். அவர்கள் வாங்கிய பொருட்களின் பற்றுச்சீட்டுக்களை அவதானித்து இல. 1 முதல் 12 வரையிலான வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| அப்பா வாங்கிய பொருட்களின் பற்றுச்சீட்டு - 0123 | | | அம்மா வாங்கிய பொருட்களின் பற்றுச்சீட்டு - 0998 | | |
|---|---|---|---|---|---|
| அளவு | விபரம் | விலை | அளவு | விபரம் | விலை |
| 1 m | பொப்ளின் | 18.00 | 250g | மாசி | 100.00 |
| 04 | விரிப்புக்கள் | 480.00 | 04l | தே.எண்ணெய் | 160.00 |
| 02 | சேர்ட்டுகள் | 800.00 | 10Kg | அரிசி | 500.00 |
| 08 | பெனியன்கள் | 800.00 | 10pkt | பிஸ்கட் | 100.00 |
| 500cm | ரேந்தை | 160.00 | 3Kg | சீனி | 108.00 |
| 1 | ரீசேர்ட் | 180.00 | 3 Kg | பருப்பு | 180.00 |

01. பொருட்களை வாங்கி வருவதற்காக அம்மா செலவிட்ட தொகை எவ்வளவு?
..........
02. பொருட்களை வாங்கி வருவதற்காக அப்பா செலவிட்ட தொகை எவ்வளவு?
..........
03. 1 லீற்றர் தே.எண்ணையின் விலை யாது?
..........
04. 2 மீற்றர் ரேந்தையின் விலை யாது?
..........
05. 10 ரீ சேட்டுக்களின் விலை யாது?
..........
06. 6 கிலோ கிராம் சீனியின் விலை யாது?
..........
07. 1 கிலோ கிராம் மாசியின் விலை யாது?
..........
08. 1 மீற்றர் பொப்ளின், 4 படுக்கை விரிப்பு, 1 சேர்ட்டு ஆகியவற்றின் விலை என்ன?
..........
09. அதிகம் செலவிட்டவர் அம்மாவா? அப்பாவா?
..........
10. அதிகம் செலவிட்டவர் குறைவாக செலவிட்டவரைவிட எவ்வளவு தொகை அதிகம் செலவிட்டார்.
..........





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II
விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 11



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்**

## பகுதி -I

1. 2
2. 1
3. 6
4. 5
5. மஞ்சள்
6. 3
7. 3
8. 3
9. 2
10. 4
11. 2
12. 3
13. அண்ணன் பிறந்தபோது நான் பிறந்திருக்கமாட்டேன்
14. முக்கோணத்திற்கு நான்கு முகங்கள் இல்லை.
15. 3
16. 1
17. 3
18. 3
19. 1
20. 3
21. 4
22. 2
23. 3
24. 1
25. 2
26. 1
27. 3
28. 3
29. 4
30. 3
31. 4
32. 9
33. 25
34. ரூபா 4
35. 3
36. 3
37. 3
38. 4
39. 3
40. 2

## பகுதி -II

**01.** 1. கணனி 2. வீண் செலவு 3. குறைவு 4. ஆணையிடுதல் 5. பங்காற்றினேன் 6. ஆசிரியை 7. நான் 8. ஏமாற்றுவது + இல்லை 9. சிரிப்பது 10. கல்வி, வணிகம், வங்கி

**02.** 1. 3 2. 2

**03.** 1. உதவி செய்தல் 2. உலகம் தெரியாதிருத்தல்

**04.** 1. Book 2. Pen 3. Five. 4. Green

**05.** 1. தயவு செய்து அமைதியாக இருங்கள் 2. உள்ளே வாருங்கள் 3. நன்றி 4. இது என்ன?

**06.** 1. அம்மா 2. பு(ட்)டுவ 3. அம்ப (டி) 4. விதுஹஸ்பதி

**07.** 1. பாடசாலை 2. வெள்ளை நிறம் 3. பால் 4. ஆசிரியை

**08.** 1. 3 2. 1 3. 4 4. 1 5. 2 6. 2 7. 1 8. 2 9. 1 10. 1

**09.** 1. 6 2. 4 3. 3 4. 1 5. 5

**10.** 1. சரி 2. சரி 3. சரி 4. சரி 5. பிழை

**11.** 1. கிறுக்கல் சித்திரம் 2. சோம் தையல் 3. மின் தூக்கி 4. மின்பாரம் தூக்கி 5. லூயி பாஸ்டர்

**12.** 1. 5 A 2. 19 3. 22 பேர் 4. 66 5. 5 6. 1

**13.** 1. 315 பேர் 2. 34 ரூபா

**14.** 60 பைகளில்

**15.** 50 ரூபா

**16.** தமிழ் - 2000 பேர் சிங்களவர் 1000 பேர்

**17.** 222/=

**18.** 209

**19.** 7 லீற்றர் 275 மில்லி லீற்றர்/7275 மில்லிலீற்றர்

**20.** 7/6 / 1 1/6

**21.** 24 சதுர சென்ரி மீற்றர் 24 $cm^2$

**22.** 305

## புள்ளியிடல்

| | |
|---|---|
| வினாத்தாள் I | 40 X 2.5 = 100 புள்ளி |
| வினாத்தாள் II | |
| வினா 01 - | = 10 புள்ளி |
| வினா 02 - | = 02 புள்ளி |
| வினா 03 - | = 02 புள்ளி |
| வினா 04 - | = 04 புள்ளி |
| வினா 05 - | = 04 புள்ளி |
| வினா 06 - | = 04 புள்ளி |
| வினா 07 - | = 04 புள்ளி |
| வினா 08 - | = 10 புள்ளி |
| வினா 09 - | = 05 புள்ளி |
| வினா 10 - | = 05 புள்ளி |
| வினா 11 - | = 05 புள்ளி |
| வினா 12 - | = 12 புள்ளி |
| வினா 13 - | = 20 புள்ளி |
| வினா 14 - | = 12 புள்ளி |
| தெளிவான எழுத்து- | = 01 புள்ளி |
| மொத்தப்புள்ளி | = 100 புள்ளி |

**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

| | | |
|---|---|---|
| வண்ணக் கிளிபோல் பறந்திட ஆசை!<br>வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!<br>கன்னல் தமிழைக் கற்றிட ஆசை!<br>கடலில் மீனாய் நீந்திட ஆசை! | மலர்களைப் போல மணந்தர ஆசை!<br>மலைமேல் மலைமேல் ஏறிட ஆசை!<br>தளர்வோர்க் கென்றும் உதவிட ஆசை!<br>தாய்போல் அன்பைப் பொழிந்திட ஆசை! | கடமையை உணர்த்தும் செயல்பட ஆசை!<br>கடின உழைப்பால் வென்றிட ஆசை!<br>மடமையைக் கொழுத்த மனத்தினில் ஆசை!<br>மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை! |

01. எதனைப் போல பறந்திட ஆசை?
..........................................................................................
02. அடைமொழி ஒன்று எழுதுக.
..........................................................................................
03. உயர்திணைப் பெண்பால்?
..........................................................................................
04. உவமைத் தொடர் ஒன்று எழுதுக.
..........................................................................................
05. இடப்பெயர் ஒன்று எழுதுக.
..........................................................................................
06. சினைப் பெயரை எழுதுக.
..........................................................................................
07. "மடமை" என்பதன் ஒத்த சொல்லைத் தருக.
..........................................................................................
08. "கடினம்" என்பதன் எதிர்ச் சொல்லை எழுதுக.
..........................................................................................

**பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.**

09. கண்ணயர்தல் ..........................................................
10. சந்தி சிரித்தல் ..........................................................

**கீழே தரப்பட்ட வாக்கியத்தை இரு தனிவாக்கியங்களாக்கி எழுதுக.**

11. மாணவர்கள் வகுப்பிற்குச் சென்று பாடம் படித்தனர்.
..........................................................................................
..........................................................................................

**இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரு வாக்கியமாக எழுதுக.**

12. மழை பெய்தது. பயிர்கள் செழித்து வளர்ந்தன.
..........................................................................................

**பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான குறியீடுகளை இடுக.**

13. தாயே சுக்கிரீவன் எங்கே இருக்கிறான் என்று இராமன் கேட்டான்.
14. இராம இலக்குமணர் காடுகள் குன்றுகள் நதிகள் சோலைகள் என்பவற்றைக் கடந்து சென்றனர்.

**தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு கீழேயுள்ள வினாக்களுக்குரிய விடையினை எழுதுக.**

(ஓடியது, பாடுவான், மலர்கின்றன, பார்க்கின்றனர், பாடகன், வந்தான்)

15. எதிர்கால வினைச் சொல் ஒன்று எழுதுக. :..........................................
16. உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. :..........................................
17. உயர்திணை இறந்த காலவினைச் சொல் ஒன்றை எழுதுக. ..........................................
18. நிகழ்கால உயர்திணை பன்மை வினைச்சொல் ஒன்றை எழுதுக..........................................
19. எதிர்கால உயர்திணை ஒருமை வினைச் சொல் ஒன்றை எழுதுக..........................................
20. நிகழ்கால அஃறிணை பன்மை வினைச்சொல் ஒன்றை எழுதுக..........................................





**கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.**

21. நடிகர் குழு என்பது போல கள்வர் :..........................................
22. அறுபதாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா :..........................................
23. தனது பொருள் எதையும் பிறருக்கு ஈயாதவன் :..........................................
24. புராதன சின்னங்களைப் பாதுகாப்பாக வைக்குமிடம் :..........................................
25. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன :..........................................
26. அனைத்து உடமைகளையும் இழந்தவன் :..........................................

**பின்வரும் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான தொடரை எழுதுக.**

**இணைமொழி, இரட்டைக்கிளவி, அடைமொழி, உவமைத்தொடர், மரபுத்தொடர்**

27. இனிமையான :..........................................
28. அனலிடைப்பட்ட மெழுகு போல :..........................................
29. செவிசாய்த்தல் :..........................................
30. பள பள :..........................................
31. அருமை பெருமை :..........................................

**பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

32. நங்கி கடேட்ட கியா :..........................................
33. அம்மா கெதற எனவா :..........................................

**பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை சிங்கள உச்சரிப்பில் எழுதுக.**


34. தென்னை மரம் :..........................................
35. தம்பி பால் குடி :..........................................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

36. Play ground:.......................................... 37. Air port :..........................................

38. Library.......................................... 39. Hospital..........................................

**தரப்பட்டுள்ள ஒளிச் சமிக்ஞையைப் பார்த்து விடை எழுதுக.**




40. A மின் குமிழ் ஒளிர்ந்தால் :..........................................
41. B மின் குமிழ் ஒளிர்ந்தால் :..........................................
42. C மின் குமிழ் ஒளிர்ந்தால் :..........................................

**சரியான விடையினை எழுதுக.**

43. தேசியக் கொடியில் வாளேந்திய சிங்கமும், சிவப்பு நிறமும் எதனைக் குறிக்கும்?
..........................................................................................
44. முலிந்த, சபர உன அழைக்கப்பட்டவர்கள்?
..........................................................................................
45. ஆதி வாசிகளின் நடனம்?
..........................................................................................
46. 94 பென்சில்கள் 7 பேரிடையே சமமாகப் பகிரப்பட்டபின் எஞ்சியிருக்கக்கூடிய பென்சில்கள் எத்தனை?
..........................................................................................
47. போத்தல் ஒன்றில் உள்ள குளிர்பானத்தின் அளவு 1 லீற்றர் 450 மில்லி லீற்றர் ஆகும். அவ்வாறான 8 போத்தல்களில் உள்ள மொத்தக் கனவளவை லீற்றர், மில்லி லீற்றரில் தருக.
..........................................................................................